திருஅருட்பிரகாசவள்ளலார்

அருளிய

தெய்வமணி மாலை



தெளிவுரை :

அருளுரை க.கிருஷ்ணமூர்த்தி

தெய்வமணி மாலை

திருவருட்பா

தெளிவுரை : ஆசிரியர்

அருளுரை க.கிருஷ்ணமூர்த்தி

வெளியீடு

திருவருள் பதிப்பகம்

28, வள்ளலார் நகர், வேப்பம்பட்டு போஸ்ட்

திருவள்ளூர் – 602024. செல் : 9940233935

நூல் விவரப் பட்டியம்

நூலின் தலைப்பு	: தெய்வமணி மாலை
முதல் பதிப்பு	: ஆகஸ்டு 2007
பிரதிகள்	: 3000
உரிமை	: ஆசிரியருக்கு
ஆசிரியர்	: அருளுரை. க.கிருஷ்ணமூர்த்தி
மொழி	: தமிழ்
நூலின் அளவு	: 1 X 8 கிரவுன்
தாள்	: 10.5 கிராமம்
அச்சு	: 12 புள்ளி
பக்கங்கள்	: 112
ஒளி அச்சு கோப்பு	: செல்வி. மா. லாவண்யா, ஸ்ரீ முருகன் D.T.P. Centre M.R.M. Complex,திருநின்றவூர். செல் : 9841416951
அச்சிட்டோர்	: T. ராஜகுரு T.R.K. பிரஸ், 39, சைதாப்பேட்டை ரோடு, வடபழனி, சென்னை – 26. செல் : 9444862493
விற்பனையாளர்	: திரு. கந்தகோட்டம், ஆ.வடிவேலு 120/77பி கிராமத்தெரு,சாத்துமா நகர், காலடிப்பேட்டை, சென்னை – 19 செல் : 9840619263
வெளியீடு	: திருவருள் பதிப்பகம் 28, வள்ளலார் நகர், வேப்பம்பட்டு Po திருவள்ளூர் – 602024
விலை	: ரூ. 30/-

4-4

தெய்வமணிமாலை என்ற நூலுக்கு அணிந்துரை

டாக்டர்.ஔவை நடராசன்

முன்னாள் துணைவேந்தர்.

திருவருட்பிரகாச வள்ளற்பெருமான் முருகப்பிரானை இளமைக்காலத்தில் வழிபாடு செய்தார். முதல் திருமுறை முருகக்கடவுளைத் துதிக்கும் பாடல்களைக் கொண்டது அன்பர்கள் வேண்டுகோலின் வண்ணம் திருமால், திருமகள், கலைமகள், இரரேணுகை முததிய தெய்வ வடிவங்களையும் அவர்பின்னர் பாடினார். இடைக்காலத்தில் பரசிவ வணக்கம் செய்தார். நிறைவுப் பகுதியில் "சமயங் கடந்த மோனச் சமரச" நிலையில் அருளிய பாடல்கள் திருவருட்பாவின் ஆறாந்திருமுறையாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

முதலைந்து திருமறைகள் ஏணிப்படிகளாய் இலங்கி "ஏறா நிலைமிசை ஏற்றி என் தனக்கே, ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி" என்றபடி ஆறாறதன் மேல் அவரை ஏற்றிவைத்த நிறங்களைக் காட்டும் பாடல்கள் எனலாம். வள்ளற்பெருமானை ஞானாசிரியனாய் ஏற்ற நல்லன்பர்க்கும், அவையே ஏணிப்படிகளாகும். பேணித் தொழுமடியர் விசும்பேறப் பிறங்கருளால் ஏணிப்படி நெறியிட்டுக் கொடுப்பன என்று நாவரசர் அருளியவாறே சன்மார்க்க மெய்யன்பர்கள் திருமுறைப் பாடல்களை இன்றளவும் பேணி வருகின்றனர்.

வள்ளற்பெருமான் முதல்முதல் அருளிய பதிகம் கந்தக்கோட்டப்பத்து. பூக்கடை கந்தசாமி கோயில் என்றே உலகவர் வழங்கி வந்த காலத்தில், வள்ளற்பெருமான் கந்தகோட்டம் என்று அழகிய பெயரில் திருக்கோயிலை அழைத்து மகிழ்ந்தார். அது முதல் அது கந்தக்கோட்டமாயிற்று. ஓங்கு ஓங்கெனச் சொற்பொருட்பின் வருநிலை அணியமைத்துப் பாடியபின் அது செல்வச் செழிப்போங்கி, அடியார் செறிவோங்கிப் புகழோங்கித் தலைமையும் பெற்றுத் திகழ்கிறது. தார்கொண்ட சென்னையிற் கந்தகோட்டம் என்ற தலப்பெயரால் பிறந்த முப்பத்தொரு பாடல்கள் கொண்ட தெய்வமணி மாலை பதினான்கு சீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தங்கொண்ட அரிய மணியாரமாக அமைந்துள்ளது.

அடுக்கி வரலாகிய விளிகளும் உவமைகளும், தன்னுணர்வு நிலையும், முருகன் பெருமைகளும் பாட இந்த யாப்பு இனிதாகக்

கைகொடுப்பதாகும். மோனை எதுகை நலங்களும், முருகனே நெடியமால் மருகனே, சிவபிரான் முத்தாடும் அருமை மகனே என்பன போன்ற வழியெதுகைகளும் நம் நெஞ்சை அள்ளுபவை.

பாடல்களைப் பயிலும்போது இளவயதிலேயே எத்துணைத் தத்துவப் பேரறிவுடன் வள்ளலார் திகழ்ந்தார் என்று எண்ணி வியக்கலாம். தெய்வமணி மாலைக்கு அருள் நாவலர் இரசபதி, உரைவேந்தர் ஔவை துரைசாமி, புலவர் காமாட்சிநாதன் முதலிய சிலர் உரை செய்தனர். சன்மார்க்க மாமணியாகத் திகழும் திரு. க.கிருஷ்ணமூர்த்தி வள்ளலார் வழித்தொண்டராவார். திருவருட்பாச் செம்மல் முத்து இராமலிங்கனார் அவர்களைத் தம் வழிகாட்டியாகக் கொண்டவர். தான்கொண்ட சன்மார்க்க ஆர்வமும் உருக்கமும் தெய்வமணி மாலைக்கு அவரை உரை வரையச் செய்துள்ளன. தெய்வமணி மாலையினை ஓதியும் திரு. கிருஷ்ணமூர்த்தியின் உரை நலங்களை உய்த்துணர்ந்தும் அன்பர்கள் நலம் பெறுவார்கள் என்பதற்கு ஐயமில்லை. வள்ளற்பெருமான் பெயரில் வழங்கி வரும் உரைநடைப்பகுதியில் "சுப்பிரமணியம் என்பது என்ன? நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தியிருக்கின்றது. இந்தச் சோதிமணியை சண்முகமென்று பெரியோர்கள் சொல்வார்கள். நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடந்தாண்டி விசுத்தியாகிய இதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடியிருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்வார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேகமென்பதையும் சண்முகம் என்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் சண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ த்துவங்களினது அந்தத்தில் உன்மணிக் கப்பால் சாந்த நிறைவாயுள்ள ஆறதலையாகிய சுத்த ஆன்ம அறிவான உள்ளமே சுப்பிரமணியம் என்ற விளக்கத்தைக் காணலாம். தெய்வமணி மாலையில் இடம்பெறும் அலங்களன் ஈற்றடியோடு இக்குறிப்பையும் இணைத்து ஆராயலாம். சன்மார்க்க அன்பர் திரு. க. கிருஷ்ணமூர்த்தியின் முயற்சியைப் பாராட்டுகிறேன். எளிமையும் இனிமையும் வாழ்வாகக் கொண்ட நண்பர் கிருஷ்ணமூர்த்தி தாம் நினைத்த நலம் பெறவேண்டி விழைகிறேன்.

ஔவை நடராசன்

பாராட்டுறை

திரு. எஸ்.ஆர்.கோவிந்தராஜ்

வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே வியந்து நினை நமது
பெம்மானென் றடிகுறித்துப் பாடும் வகை புரிந்த
பெருமானே நான் செய்த பெருந்தவமெய் பயனே
- வள்ளலார்.

வீதியிலே விளையாடித்திரிந்த மிகச்சிறிய பிள்ளைப் பருவத்திலேயே, அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், அருட்பாடல்களைப் பாடத் தொடங்கினார், என்பது அவர் இயற்றிய மேற்குறிப்பிட்ட பாடலால் விளங்குகிறது.

கந்த கோட்ட முருகப் பெருமானைப்பற்றி அடிகளார் பாடியவை தெய்வமணிமாலை 31 பாடல்கள். இராமலிங்க அடிகளார் முதன் முதலில் பாடி வழிபட்ட தலம் கந்த கோட்டம்.

முதல் முதலில் பாடப்பெற்றது கந்த கோட்ட முருகப் பெருமானைப் பற்றிய தெய்வமணிமாலை. முதல் சொல் திருஓங்கு.

திருஓங்கு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலம் ஓங்குகந்தவேளே என்று அதில் அடிகளார் குறிப்பிடுகிறார்.

இராமலிங்க அடிகளால் பாடப்பெற்ற பின்னரே செல்வம் கொழிக்கும் திருக்கோட்டமாக திகழ்கிறது. கந்தசாமி கோயில் என்று வழங்கப்பெற்று வந்த அதனை கந்த கோட்டம் என பெயரிட்டவர் இராமலிங்க அடிகளே.

பின் நாளில் வள்ளல் பெருமான் சன்மார்க்கம் என்ற நெறியை ஏற்படுத்தினார்கள். கடவுள் ஒருவரே அவரை உண்மை அன்பால் ஒளி வடிவில் வழிபட வேண்டும் என்பதே சன்மார்க்க கொள்கை.

ஆறாம் திருமுறையில் எல்லாவற்றையும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் சாயையாகவே வள்ளல் பெருமான் பார்த்ததாக கூறுகிறார். இதோ அவர் அருள்மொழி.

"மாயையாற் கலங்கி வருந்தியபோதும் வள்ளலுன்
றன்னையே மதித்துன்
சாயையாய்ப் பிறரைப் பார்த்ததே யல்லாற்
றலைவே றெண்ணிய துண்டோ" என்பர்.

பெரும்பாலோர் ஆறாம் திருமுறை மட்டுமே முடிந்த முடிவான கொள்கைகளை உணர்த்துவதாகக் கூறுவர். முதல் திருமுறையிலிருந்தே, உலகியலோடு அருளியலும் ஒருங்கு அறியக் கூடிய அருமையான பல, ஞானப்பாடல்களும் கலந்திருப்பதை காணமுடிகிறது.

ஆறாந்திருமுறையின் ஆழமான பொருளை உணர்வதற்கு இது (ஆரம்ப கல்வியாக) வழிகாட்டியாக அமைகிறது.

தியானம் செய்ய வேண்டுமானால் ஏதாவது ஒரு உருவத்தைத் தியானிக்க வேண்டும். அருவமாக தியானிக்கக் கூடாது, பின் உருவம் கரைந்து அருவமாகும் என்பர் பெருமான்.

பொருளியல் வாழ்வில் மிக ஈடுபாடு கொண்டு அறிவியல் மிகவேகமாக வளர்ந்து வரும் இந்நாளில் ஆன்மீக நூல்களை அதிலும் அருட்பாவை படித்து சுவைத்து இன்புறவும், ஆண்டவரின் அருளைப்பெறவும் முயலுவோர் மிக அறியர்.

அருளுரை க. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திரு அருட்பாவில் ஆழங்கால் பட்டவர்.

வள்ளல் பெருமான் மீது ஆழ்ந்த பற்றுள்ளம் கொண்டவர் இவர் பல ஆண்டுகளாக **நடத்தி வந்த வள்ளலார் அருள்ரை தற்போது அருட்பெருஞ்ஜோதி** மாத இதழை விடாமல் தொடர்ந்து நடாத்தி வருகிறார்.

அருளுரையை அடை மொழியாகக்கொண்ட கிருஷ்ண மூர்த்தி அவர்கள், அப்பெயரை என்றும் பொருள் நயமிக்கதாகவே மெய்ப்பித்து வருகிறார்.

உரை எழுதுவதில் இவருக்குள்ள தெளிந்த அறிவையும் ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றன, பக்தி பரவசத்தில் ஆழ்த்துகின்றன.

இவர் எழுதியுள்ள தெய்வமணி மாலை உரையில் ஆறாந்திரு முறையின் வார்த்தைகள்சிதறிகடப்பதை காணமுடிகிறது.

தான் நுகர்ந்து மகிழ்ந்ததை மற்றவர்களும் நுகர்ந்து மகிழும்படி ஆக்கியுள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் உரை எழுதுமுன் தலைப்பு கொடுத்திருப்பது, பொருத்தமாகவும் புதுமையாகவும் அமைந்திருக்கிறது.

மூலத்திற்கு சிறப்பு செய்பவர்கள் உரையாசிரியர்கள், பாடலுக்கு பொருள் பிழையாமல் உரை எழுதுவது அரிய செயலாகும். இவர் யாவரும் விரும்பும் வகையில் தெளிபொருளை எளிய மக்களும் புரிந்துக்கொள்ளும் வகையில் சிறப்பாக ஆக்கியுள்ளார்.

அதுவும் 75 வயதில் ஒருவர் அப்பணி செய்ய இயலும் என்பதற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு. இப்படைப்பு உள்ளடக்கத்திற்கேற்ப ஒளி வீசும் என்பதில் தடையில்லை.

இவரது எழுத்துத் தொண்டு வளர எனது பாராட்டுகள். மேலும் எல்லா நலன்களோடு பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை பிரார்த்திக்கிறேன்.

எஸ்.ஆர்.கோவிந்தராஜ்
நெ.1, வள்ளலார் தெரு, காமராஜ நகர், ஆவடி
சென்னை - 71.

போற்றுரை

திரு. பி. வீராசாமி B.A.,

மனிதன் மனிதனாக வாழ வேண்டும். ஒழுக்கம் உயிரினும் மேலாக ஓம்பப்பட வேண்டும். இறைவனை அடைய வேண்டி பின்பற்ற வேண்டிய மார்க்கங்கள் மூன்று அவை கன்ம மார்க்கம், பக்தி மார்க்கம் ஞானமார்க்கம் என்பன ஞான அவைகளுள் மார்க்கத்தை வலியுறுத்தி சன்மார்க்க சங்கம் அமைத்து அகத்தே கறுத்து புறத்தே வெளுத்திருக்கும் மாந்தரை திருத்தி இகத்தே பரத்தைக்காண ஜெகத்தே வந்து தித்தேன் என்று கூறிய திருஅருட்பிரகாச வள்ளலார் தமது இளமைப் பருவத்தில் பக்தி மார்க்கத்தைக் கொண்டு ஒழுகினார் என்பதற்கு அவர் பாடியுள்ள தெய்வமணி மாலை திருவொற்றியூர் பதிகங்கள் ஆகியவைகள் சான்றாகும் தெய்வமணி மாலை வள்ளார் ஒன்பது வயதில் பாடியதாகக் கூறப்படுகிறது இதில் 31 பாடல்கள் உள்ளன.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய நெறி முறைகளைவகுத்து அவற்றைகைக்கொள்ள அருள்புரிய வேண்டும் என்று சென்னை கந்த கோட்டத்திலுள்ள முத்துக்குமரனை வேண்டி பாடியுள்ளார். இல்லற வாழ்வில் ஈடுபட்டவர்களுக்கு அறிவுரையைத்தந்துள்ளார்.

உறுதியான பக்தியும் உள்ளதமான வாழ்க்கையும் ஒவ்வொரு வரிடமும் இருக்க வேண்டும். இதற்கு இறையருள் அவசியம் என்பதை ஒவ்வொரு பாடலிலும் வலியுறுத்துகிறார். அறிவுவிளக்கம் பெறுதலே ஞான மார்க்கம் என்பதை எடுத்தியம்புகிறார்.

உயர்ந்த கருத்துக்களை எளிய முறையில் பாடியுள்ள பாடல்களுக்கு சாதாரண மக்களுக்கும் புரியும் படிக்கு உரைகாண வேண்டும் என்று இந்நூல் ஆசிரியர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விழைந்து முயற்சி மேற்கொண்டுள்ளார். வள்ளலார் தமது பிற்காலத்தில் வடலூரில் சன்மாக்க சங்கம் கண்டு மக்களுக்கு உபதேசித்த கருத்துக்கள் தெய்வமணி மாலையிலும் எப்படி அடிகோலப்பட்டுள்ளன என்று விளக்க பெருமுயற்சி எடுத்துள்ளார். புதிய முறையில் உரைகாண வேண்டும் என்பது அவர் உள்ளக் கிடக்கை அவர் நீண்டகாலமாக சன்மார்க்க கொள்கைகளைப் பரப்புவதற்கு அருட்பெருஞ்ஜோதி என்ற மாதப்பத்திரிகையை நடத்தி வருகிறார்.

ஆழ்ந்த வேதாந்த சித்தாந்த யோகாந்த கருத்துக்களை பாமரமக்களிடம் திணிக்காமல் சன்மார்க்க கருத்துக்களை மக்களுக்கு விளக்க வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துள்ளார். வெல்க அவர் தம்முயற்சி என்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் போற்றி திரு. க. கிருஷ்ணமூர்த்தி அவர்களை வாழ்த்துகிறேன்.

B. வீராசாமி B.A.,
55-10 வது தெரு,
காமராஜ் நகர்,
ஆவடி, சென்னை - 71

தேதி : 4.8.2007

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய

தெய்வமணி மாலை

தெளிவுரை

**சென்னையில் கந்தகோட்டத்துள்
வளர்தல மோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச்
சைவமணி சண்முகத் தெய்வமணியே**

இதன் விளக்கம் 31 பாடல்களுக்கும் பொருந்தும்

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவடிகள் (ஒளி, வெளி) அருள் அறிவு, அருள் அனுபவம். இத்திருவடிகள் ஞானிகளின் (சென்னியில்) தலையில் பொருந்தியுள்ளது.

உடலிற்கு சிரசே பிரதானம். இப்பூதலத்தில் (தலம்) ஆன்மீகம் ஓங்கி வளர்வதற்கு காரணமானது தமிழ்நாடு தலைநகரான சென்னை.

ஞானசித்தர்கள் நிறைந்த நாடு. சுகந்த அருள்மணம் வீசும் கோட்டைப் போன்ற கோயிலை இடமாகக் கொண்டு வெற்றி வாகைச்சூடிய கந்தவேளே என்றார்.

(சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் கந்தவேளே)
கனிவான முகத்தையும் தூய்மையான உள்ளத்தையுடைய மணி (தண்முகத்துய்யமணி) எச்சமய தெய்வங்களும் தான் என நின்ற தெய்வம் அருட்ஜோர்தி தெய்வம்.

சிற்றம்பலத்தே (சித்து + அம்பலம்) விளங்குகின்ற தெய்வம். சித்து = அறிவு விளங்கும் புருவமத்தி. நெற்றிக் கண்ணாக உள் ஒளியாக இருந்து உயிர்களை இயக்குகிறது.

உள்முகமாக ஆராய்ந்து பார்ப்பதற்கு அருட்ஜோதி சிவமாக காட்சியளிக்கிறது. (உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே) முருகனை அருட்ஜோதி சாயலாகவே பார்க்கிறார்.

தெளிவுரை :

அருளுரை க. கிருஷ்ணமூர்த்தி

முன்னுரை :

தெய்வமணி மாலை பாடிய ஆண்டு 1835ம் ஆண்டு என வைத்துக்கொள்வோம். சில ஆயிரம் நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் பல ஆயிரக்கணக்கான சமயங்கள் மதங்கள் தோன்றின. தற்போது குறிப்பிடத்தக்க சமயங்கள், மதங்கள் ஒரு சில உள்ளன.

தோற்றுவித்த கர்மசித்தர்கள், ஆழ்வார்கள், அடியார்கள், ஞானிகள் பலர் ஒரு சிலரே முத்திப்பெற்றனர். பலர் இறந்துவிட்டனர்.

என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் என்கிறார் பெருமான். ஓரளவு சைவ சமயத்தில் சாகாக் கலையைப் பற்றி உணர்த்தப்பட்டுள்ளது.

சைவ சமயத்தில் புலை கொலைகள் தவிர்க்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. புலால் சாப்பிடுபவர்களும் இருந்தனர்.

சைவ சமயத்தில் குறிப்பிடப்படும் சிவன், சக்தி, முருகன், விநாயகர் போன்ற தெய்வங்களின் பெயர்களை மட்டும் குறிப்பிட்டு அகவழியாடு சன்மார்க்கக் கொள்கைகளை விளக்கினார்.

அருட்பெருஞ்ஜோதி சாயலாகவே எல்லாச் சமயத் தெய்வங்களைக் கண்டார். இந்த உண்மை உணராது சன்மார்க்கம் சைவசமயத்தை சார்ந்தது என்று பிற சமயத்தினர் ஏற்க மறுக்கின்றனர்.

வள்ளலார் நித்திய வாழ்வை ஒளிவடிவைப் பெற்று உலகெங்கும் சன்மார்க்கக் கொள்கைகளை இன்றும் பரப்பிக் கொண்டிருக்கிறார். மனிதகுலத்தை புனித குலமாக்குவது சன்மார்க்கம் ஒன்றேயாகும்.

சுப்பிரமணி

நமது புருவமத்தியில் ஆறுபட்டையாய் உருட்சியுள்ள ஒரு ஜோதி மணி பிரகாசம் பொருந்தி இருக்கிறது. இந்த ஜோதி மணியே சண்முகம் என்பர், நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடம் தாண்டிவிசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடதுபுறத்தில் ஆறுதலையுடைய நாடி இருக்கிறது.

இதை சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்த தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்தவிவேகம் என்பதையும் சண்முகம் என்பார்கள்.

ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் சண்முகம் என்பார்கள். ஆயினும் சர்வ சத்துவங்களினது அந்தளளரத்தில் உன் மணிக்கட்டால் ஊரந்தநிறைவாயுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளமே சண்முகம்.

முருகர் என்பதற்கு இளமை அழகு என்ற பொருளும் உண்டு, கந்தவேள் வடிவேல் சுப்பிரமணியம் என்ற பெயர்களும் உண்டு.

இயேசு நபிகள், முருகர், இராமலிங்கர் என்று போற்றினாலும் அருட்பெருஞ்ஜோதியை மறக்கக்கூடாது. எச்சமய தெய்வங்களும் தான் என நின்ற தெய்வம் அருட்பெருஞ்ஜோதி தெய்வம். எல்லாநிலைகளும் தன் அருள் வெளியில் நிலைக்க வைத்த தெய்வம்.

பாடல் - 1

திரு ஓங்கு புண்ணியச் செயல்ஓங்கி அன்பர் உள்
திறல் ஓங்கு செல்வம் ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான
இன்பம் திகழ்ந்தோங்க அருள் கொடுத்து

மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்கருணை மயம்ஓங்கி ஓர்
வரம் ஓங்கு தெள்ளமுத வயம் ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கி ஞான

உரு ஓங்கும் உணர்வின் நிறை ஒளி ஓங்கி
ஓங்குமயில் ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கும் நின்பதம் என் உளம்ஓங்கி
வளம் ஓங்கி உய்கின்ற நாள் எந்தநாள் ?

தருஓங்கு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கும் கந்தவேளே !
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

உய்கின்ற நாள் எந்நாள்

1. ஞான செல்வத்தை பெருகச் செய்ய (திருஓங்கு) புண்ணியமான உபகாரச் செயல்கள் தழைக்கவும், இறைவனை இடைவிடாது நினைக்கும் அன்பர்கள் இடத்தில். தனி ஆற்றல் (திறல்) மிகவும், அருட்செல்வம் பெருகி வளர்ந்து அடக்கம் பெறவும் (செறிவு) வேண்டும்.

உள்ளதனை உள்ளபடி உரைக்கும் சன்மார்க்க மெய்ஞ்ஞானம் அறிவு ஓங்கவும் பூரணப் பேரின்ப பெருவாழ்வாகிய நித்திய வாழ்வைப்பெறவும் அருள் பாலிக்கிறார்.

2. நறுமணம் (மரு) மிகுந்த செந்தாமரை (செங்கமலம்) மலர்களின் எழில் (வணம்) நிறைந்த தன்மையில் அருட்பிரகாசத்தை உணரும் அடியவர்களுக்கு நிறைந்த தயவே வடிவமானவருக்கு (கருணைமயம்) ஒப்பற்ற சித்தியை (வரம்) அளிக்கிறார்.

சிற்றம்பலத்தில் தெளிந்த அமுதமாக ஊற்றெடுத்து பேரின்ப உருவத்தை உடையவராய் (ஆனந்த வடிவு) விளங்குகிறார்.

3. மெய்ஞ்ஞான (சித்துருவானவர் பேரறிவானவர்) ஆண்டவர் அடியவர்களின் இறை உணர்வு ஓங்கும் போது சுத்த கனல் ஒளி ஓங்குகிறது.

திருஅருட்பிரகாசமாக பூரணமாக நிறைந்து (மயில்ஊர்ந்தோங்க) விளங்குகிறார்.

மற்ற எல்லா உயிர்களிடத்தும் உள்ஒளி ஆன்மநேய உறவு கொண்டு இயக்குகிறார், ஆன்மாவில் பரமான்வாக.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணும் நாளே உய்யும் நாளாகும்.

அருள் அறிவு அருள் அனுபவம் என்கிற இரண்டு திருவடிகளை (பதம் என் உளம் ஓங்க) சேர்த்தான் (பதம்) என்சிரத்தே.

அந்த நாளே நாம் உய்யும் நாள். பெருவாழ்வு வளம் பெறுநாள். உலகப்பிறவிக்கடலை நீந்தி நித்திய ஒளிவாழ்வு பெற்று உய்யும் நாளாகும்.

4. பயன்தரும் தாவரங்கள் மூலிகைகள், வளர்ந்துள்ள சென்னை (தருஓங்கு)

பாடல் - 2

பரம்ஏது வினைசெயும் பயன்ஏது பதிஏது
பசுஏது பாசம்ஏது பத்திஏது
அடைகின்ற முத்திஏது அருள்ஏது
பாவபுண்ணியங்கள் ஏது

வரம்ஏது தவம்ஏது விரதம்ஏது ஒன்றும்இலை
மனம் விரும்பும் உணவுண்டு நல்
வத்திரம் அணிந்து மடமாதர் தமைநாடி
நறுமலர்சூடி விளையாடி மேல்

கரமேவிட்டு முலைதொட்டு வாழ்ந்து அவரோடு
கலந்து மகிழ்கின்ற சுகமே
கண்கண்ட சுகம்இதே கைகண்ட
பலன்எனுங் கயவரைக் கூடாதருள்

தரமேவு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர்
தலம் ஒங்க கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

பேரின்பமும் சிற்றின்பமும்

1. உயர்ந்த மார்க்கம் ஏது ? (பரம்) முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளால் ஏற்படும் பயன் ஏது? தெய்வம் (பதி) ஏது? ஆன்மா (பசு) ஏது ?

உலகியல் பற்றுகள் (பாசம்) ஏது ? இறைவன் என்ற நம்பிக்கையில் செலுத்தும் அன்பு (பத்தி) ஏது ? அதனால் அடைகின்ற உலகியல் பற்றின் விடுதலை (முத்தி) ஏது ?

இறைவன் அளிக்கின்ற சித்தி (அருள்) ஏது? நல்வினை (புண்ணியம்) தீவினை (பாவம்) ஏது ?

2. இறைவன் அருளுகிற வல்லப சத்திகள் (வரம்) ஏது ? நம் சிற்சபையில் அறிவு விளங்கு மிடத்திலிருந்து காத்து வரும் உள் ஒளியே இறைவன்.

இதை இடைவிடாது நினைக்கிற (தவம்) ஏது மன உறுதியோடு வரையறுத்துக் கொண்ட கட்டுபாடுகள் (விரதம்) ஏது?

இவைகள் ஒன்றும் இல்லாதது. தேவையற்றது என்பர் இழிந்த மக்கள். பெருநெறி விரும்பாது கருநெறியில் உழலுபவர்கள். யார் அவர்கள் ? மனம் விரும்பும் ருசியான அசைவ ஆகாரங்கள் கிடைத்த போதெல்லாம் சாப்பிடுவார்கள்.

கவர்ச்சிமிக்க உயர்ந்த பட்டாடைகளை (வத்திரம்) அணிவர். கட்டுடலுடன் கவர்ச்சியான, இளமையான மகளிர் மீது (மடமாதர்) ஆசைகொண்டு அப்பெண் கூந்தலில் மணமுள்ள பூக்களைத் தானே அணிவதும் சரச சல்லாபத்துடன் விளையாடுதலும் விரும்புவர்.

3. மேலும் அம்மாதரின் கைகள் தன்மீது பொருந்தும் படியும், அம்மாதரின் தனங்களை தன்கைகளால (கரம்) தொடுதல் போன்றவைகளில் வீண் காலத்தைப் போக்குவர்.

அடிக்கடி அப்பெண்களோடு உடலுறவு கொண்டு இன்புறுதலே நம் கண் முன்னால் காணக்கூடிய ஈடு இணையற்ற இன்பம், உடனுக்குடன் அனுபவிக்கின்ற (கைகண்ட பலன்) பயன் என்பர். காமச் சேற்றிலே சிக்கியவர்.

லாகிரி வஸ்து, மது போன்ற தீய பழக்க முடையவர் அவர்களோடு கூடி அழிந்து போகாதபடி அருள் பாலிப்பாயாக.

4. சோற்றாசையோடு காமச்சேற்றாசைப் படுவோரை துணிந்துகொள்ள கூற்றாசைக்கொள்ளும் (மனிதத் தரத்தில்) (தரம்) உயர்ந்த மெய்ஞ்ஞானிகள் தோன்றிய இடம் தமிழகத்தின் தலைநகரமாம் சென்னையாகும்.

பாடல் - 3

துடிஎன்னும் இடை அனம் பிடி என்னும் நடை முகில்
துணைஎனும் பிணையல் அளகம்
சூதென்னும் முலை செழுந்தா தென்னும் அலை
புனல் சுழியென்ன மொழிசெய் உந்தி

வடிஎன்னும் விழி நிறையும் மதி என்னும் வதனம்என
மங்கையர் தம் அங்கம் உற்றே
மனம் என்னும் ஒருபாவி மயல்என்னும்
அதுமேவி மாழ்கநான் வாழ்க இந்தப்

படிஎன்னும் ஆசையைக் கடி என்ன என் சொல் இப்
படி என்ன அறியாதுநின்
படி என்ன என்மொழிப்படி இன்ன வித்தை
நீ படி என்னும் என்செய் குவேன் !

தடி துன்னு மதில் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே !

வன்புடை மனதை நன்மனமாக்குக

1. உடுக்கை (துடி) அமைப்பில் இடையும் அன்னப்பறவை, பெண்யானைப் (அனம், பிடி) போல ஒய்யார நடை அழகும், கருமேகத்துக்கு நிகரான முடியினைவாரிப் பின்னலிடப்பட்ட கூந்தலழகும், (முகில் துணை எனும் பிணையல் அளகம்)

சூதாடு கருவியான மொட்டுப் போன்ற மார்பகமும் (சூதென்னும் முலை) சிறப்பு மகரந்த பொடிகள் பரவிய அலை வீசும் நீரில் ஏற்படும் சுழிபோன்ற வயிற்று கொப்புழும் (செழுந்தாது எனும் அலைபுனல் சுழி என்ன மொழி செய்வுந்தி)

2. மாவடுவு (வடி) ஒத்த கண்களும், பூரண நிலாப் போன்ற முகமும் (நிறைவு மதி எனும் வதனம்) எனப் போற்றப் பாடி பருவ மாதர்களுடைய உடல் அவயவங்களை நினைத்து ஏங்குகிறான் (மங்கையர் தம் அங்கமுற்று) மனம் என்கிற கயவனானவன்,

காம மயக்கம் எனும்நிலையினை அடைந்து (மயல் என்னும் அது மேவி கவலைப்படும்படி (மாழ்க) நான் (ஆன்மா) வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன் (வாழ்க).

3. ஆண்டவரே இந்தவிதமான உலகியல் மண், பெண், பொன் பற்றை (இந்தப்படி என்னும் ஆசையை கடி என்ன) அகற்று என்று சொன்னீர். தங்களுடைய பேச்சு இந்தவிதமான நன்மைகளைத் தரும் என்று தெரியாமலிருந்துவிட்டேன்.

(என் மொழிப்படி இன்ன வித்தை) என் சொற்படி கீழ்த்தர மானவைகளை கடைபிடி என்கிறது என் மனம். நான் என்ன செய்வேன்.

(இருள்) "மை யகத்தேயுறு மரணவாதனை" அறியாமை உடைய கீழ்த்தரமான மனத்தால் மரணம் ஏற்படுகிறது.

4. எதிரிகளை தடுத்து நிறுத்துதற்குரிய போர்க் கருவிகள் சூழ்ந்த மதிலையுடைய சென்னை (துடிதுன்னுமதில்)

பாடல் - 4

வள்ளல் உனை உள்ளபடி வாழ்த்துகின்றோர்தமை,
மதித்திடுவ தன்றி மற்றை
வானவரை மதி என்னில் நான் அவரை ஒரு
கனவின் மாட்டினும் மறந்தும் மதியேன்

கள்ளம் அறும் உள்ளமுறும் நின்பதமலால் வேறு
கடவுளர் பதத்தை அவர் என்
கண் எதிர் அடுத்து ஐய நண் என
அளிப்பினும் கடுஎன வெறுத்து நிற்பேன்

எள்ளளவும் இம்மொழியில் ஏசுமொழி அன்று உண்மை
என்னை ஆண்டருள் புரிகுவாய்
என்தந்தையே எனதுதாயே என் இன்பமே
என்றன் அறிவே என் அன்பே

தள்ளரிய சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

ஆண்டவர் ஒருவரே

1. வேண்டுவதை கொடுத்தருள்கின்ற அருட்பெருஞ் ஜோதி வள்ளலாகிய தங்களை நெஞ்சமாற உண்மையாகப் போற்றுகின்ற தொண்டர்களை நான் மதிப்பேன்.

தவிர மற்றைய தேவர்களை மதித்துப் புகழ் என்று கூறினால் ஒருக்கால் கனவிலுங்கூட மறந்தும் போற்றமாட்டேன் (ஒரு கனவின் மாட்டினும்)

2. சூதுவாதற்ற கருணையே வடிவான தங்கள் திருவடிகளை அன்றி பேதங்களை வளர்க்கும் தெய்வங்களின் பாதங்களை நினைக்கமாட்டேன்.

அவர்கள் என் கண் முன்னே வந்து நின்று (என் கண் எதிர் அடுத்து) அப்பனே பெறுவாயாக என சொல்லி தேவர் பதவியைப் தந்தாலும் (ஐய நண் என அளிப்பினும்) விஷம் என்று வெறுத்து ஒதுக்கிவிடுவேன் (கடுவென வெறுத்து)

3. இங்கு நான் சொல்லிய வாசகங்கள் எள் அளவுகூட பிற தெய்வங்களைப் பழிப்பது அன்று. (எள் அளவும்

இம்மொழியில் ஏசுமொழி அன்று) அவ்வளவும் தாங்கள் உணர்த்திய உண்மையாகும்.

ஆதலால் என்னை ஏற்றுக்கொள்ள அருள் பாலிப்பாயாக. தாங்கள் என் உயிரை பகலும் இரவும் (கங்குலும்) காக்கும் அப்பனாகவும்,

அருளமுதம் தரும் தாயாகவும் மரணமிலா பேரின்பப் பெருவாழ்விற்குக் காரணமான குருவாகவும் தங்களிடம் பெற்ற மெய்யறிவை மற்றவர்களுக்கு அளிக்கும் அன்புடையவனாகவும் செய்பவரும் தாங்களே.

4. வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கக்கூடாத (தள்ளரிய) நிலையிலுள்ளது சென்னை.

ஒருவர் உயிரோடு இருக்கும் போது மற்றவர் இலேசாக தூக்கிவிடுவார். அவர் இறந்துவிட்டால் அப்பிணத்தைத் தூக்க நான்குபேர் தேவைப்படுகிறது. நாம் உட்கார, நிற்க, நடக்க, ஓட நம் உள்ளிருந்து தாங்குகிறது அருட்ஜோதி தெய்வம். தாயாகித் தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வம்.

பாடல் - 5

பதிபூசை முதலநற் கிரியையால் மனம் எனும்
பசுகரணம் ஈங்கு அசுத்த
பாவனை அறச்சுத்த பாவனையில்
நிற்குமெய்ப் பதியோக நிலைமை அதனால்

மதிபாசம் அற்று அதின் அடங்கிடும் அடங்கவே
மலைவில் மெய்ஞ்ஞான மயமாய்
வரவுபோக் கற்றநிலை கூடுமென எனதுளே
வந்துணர்வு தந்த குருவே

துதிவாய்மை பெறுசாந்த பதமேவுமதியமே
துரிசறு சுயஞ் ஜோதியே
தோகைவா கனமீ திலங்கவரு தோன்றலே
சொல்லரிய நல்ல துணையே

ததிபெறுஞ் சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

அழிவை அகற்றும் அகவழிபாடு

1. உள்ளம் தூய்மையற்று புறத்தில் கற்பனைச் சிலையை தெய்வமாகப் (பதி) பாவித்து சமய மதங்களின் ஆச்சார சங்கற்பவிகற்ப அபிஷேக ஆராதனை சடங்குகள் (சரியை கிரியை) மூலம் ஒப்புக்கு வழிபடுவது நீங்கவேண்டும். (அசுத்த பாவனையற)

நம்புருவமத்தியிலிருந்து (திருச்சிற்றம்பலம்) நம்மை இயக்கும் உள் ஒளியே உண்மையான இறைவன் பசுகரணம் என்பது ஆன்மா, மனம்.

ஆபாசத்தில் மனம் செல்வதை தடுத்து இடைவிடாது உள் ஒளியில் (பரமான்மா) மனம் பதியச்செய்யும் யோக சித்தியினால் (மெய்ப்பதியோகம்) உலகப்பற்று நீங்கி மனம் ஒருமையுறும்.

2. மனம் ஒடுங்கும் அலையாது. (மதிபாசமற்று) மனம் அடங்க (மதி) அறிவு சோர்ந்து போதலின்றி (மலைவுஇல்) உண்மை அருள் ஞான வடிவாகி (மெய்ஞ்ஞான) இறத்தல் பிறத்தலின்றி (வரவு போக்கற்று) நிலைத்த நிலைக் கைக்கூடும்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என நினைக்கும். என் அகத்தினுள்ளே நுழைந்து எனக்கு அருள் எழுச்சியைத் (உணர்வு தந்து) தந்தகுருவே வந்தனம்.

3. ஒருமையுணர்வோடு உண்மையாக வணங்கப்படும் அமைதியான பக்குவத்தில் (பதம்) எழும் அறிவுச்சுடரே, குற்றமற்ற, தானே தோன்றிய பேரொளியே, (துரிசறு சுயஞ் சோதியே)

அருட்பிரகாசத்துடன் பொருந்திய அருட்ஜோதிப் பேரொளியில் எழுகின்றவரே (மயில்) எல்லாவற்றிற்கும் காரணமானவரே (தோன்றலே)

இப்படி எனக் கூற முடியாதளவு இரவும் பகலும் என்னைக் காத்துவருபவரே வந்தனம். (சொல்லறிய துணை)

4. உலகத்தவரால் போற்றிப்புகழப்படும் சென்னை. (நதிபெறும்) கண்ணாகக்காக்கின்ற கருத்தனை நினைந்தே கண்ணார நீர்விட்டுக் கருத அறியீரே எண்ணாதது எண்ணவும் நேரும் ஓர்காலம் எத்துணை கொள்கின்றீர் பித்து உலகீரே.

பாடல் - 6

காம உட்பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழு மூடனும்
கடுமோக வீணனும் கொடுமதம் எனும் துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்

ஏமம் அறு மாச்சரிய விழலனுங் கொலையென்று
இயம்பு பாதகனு மாம்இவ்
எழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற் றிடாமல் அருள்வாய்

சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத்
திறன் அருளி மலய முனிவன் சிந்தனையின்
வந்தனை உவந்த மெய்ஞ்ஞானசிவ
தேசிக சிகா ரத்தினமே

தாமம் ஒளிர் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

உன்னுள் ஜோதியைக் காண ஏழுதிரைகளை நீக்குக

1. நம்மனதிலுள்ள பகைவர்கள் 1. (பெண் ஆசை) காமம் என்கிற விரோதியும்.

2. கோபம் என்கிற பொல்லாத தீயவனும் 3. மிக்க கஞ்சத்தனமான லோபம் என்கிற அறிவற்ற மூடனும

4. கடுமையான மிக்க பேராசையுடைய மோகம் என்கிற சோம்பேறியும்.

5. கொடிய திமிர் கொண்டு (கொடுமதம்) இரக்கப் பார்வையற்று தீயவார்த்தையாடும் அகங்காரம் என்கிற பாதகனும் (கண்கெட்ட ஆங்காரி)

6. தன்னையே பாதுகாத்துக்கொள்ள விரும்பாத (ஏமமறு) மாச்சரியம் எனும் சோம்பேறியும். (விழலன்)

7. கொலை செய்தல் என்று பேசும் கொலைகாரனும் ஆக இந்த ஏழு பேர்களும் இக்கொடியவர்களுக்கு நெருக்கமாக இருந்து உதவும் கொடியவர்களும் இவர்களின் எண்ணங்களும் செயல்களும் என்னைப் பற்றிக்கொள்ளாமல் அருள் பாலிப்பாயாக.

2. மேன்மை நலமும் (சேமம்) உள்ளதை உணர்த்தும் வேதத்திலுள்ள ஓங்கார பிரணவத்தின் மெய்ப் பொருளையும். (ஓம் எனும் அருள் பதத்தின் ஆற்றலையும் தெளிவாகக் கூறிய அகத்திய முனிவன்) (மலைய முனிவன்)

தவமிருந்த பிரார்த்தனையை களித்து ஏற்றுக் கொண்ட மெய்ஞ்ஞான சிவமாகிய குருவே (மெய்ஞ்ஞான சிவதேசிக சிகாரத்தினமே) சிரோன்மணியே வந்தனம்.

நம்முள் இயக்குகிற ஆண்டவரின் அன்பை இடைவிடாது நினைத்து அன்பாயிருத்தலும் நம்மைச் சார்ந்த உயிர்களிடத்தில் இரக்கத்தோடும் பழகிவந்தால் தீய குணங்கள் எழாது. சர்வையும் தவிர்க்கலாம்.

சொல்மாலைகளால் பிரகாசிக்கின்ற சென்னை (தாமம் ஒளிர்) வடலூர் சத்திய ஞான சபையில் பூசந்தோறும் கருமை, நீலம் போன்ற திரைகளை நீக்க அருட்ஜோதி தரிசனம் செய்கிறோம். நம் சிற்றம்பலத்திலிருந்து இயக்கும் உள்ஒளி (ஆண்டவரைக்) காண காமம், கோபம் போன்ற தீய குணங்களை அகற்ற வேண்டும் சத்திய ஞானசபை என்னுள் கண்டனன் சன்மார்க்கசித்தியை (மரணமிலாப்பேறு) நான் பெற்றுக்கொண்டேன்

பாடல் - 7

நிலை உறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடும்
நிகழ் சாந்தமாம் புதல்வனும் நெறிபெறும்
உதாரகுணம் என்னும்நற் பொருளும் மருள்
நீக்கும் அறிவாந் துணைவனும்

மலைவறும் நிராங்கார நண்பனுஞ் சுத்தமுறும்
மனம் என்னும் நல் ஏவலும்
வருசகல கேவலம் இலாத இடமும் பெற்று
வாழ்கின்ற வாழ்வரு ளுவாய்

அலையிலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுத மலர்வாய்
அணிகொள் பொற்கொடி பசுங்கொடியிருபுறம்
படர்ந்து அழகுபெற வருபொன் மலையே

தலைவர்புகழ் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

சன்மார்க்க இல்லறம்

1. நிலைத்து நிற்கின்ற பற்றற்ற நிலையில் (நிலையுறு நிராசை) உள்ள சான்றோர் குலத்தில் பிறந்த மனைவியோடும்.

2. வாழ்க்கை நடைமுறையில் (நிகழ்) பொறுமையுடைய மகனும்.

3. நீதி முறையில் சம்பாதித்து (நெறி) பிறருக்கு தளராது தாராளமாக உதவுகின்ற (உதாரகுணம்) செல்வமும்.

4. அறியாமை மயக்கத்தை (மருள்) நீக்குகின்ற அறிவாகிய உடன் பிறந்த சகோதரனும்.

5. சோர்ந்து போகாத (மலைவு அறும்) அகங்காரமற்ற (நிராங்கரம்) தோழனும்.

6. தவறே செய்யாத பரிசுத்தமுடைய மனம் எனும் பெயர்பெற்ற நல்ல வேலைக்காரனும் (ஏவல்)

7. தொடர்ந்து வருகின்ற வினையால் சகலம கேவலம் எனும் மும்மல மற்ற சுத்த இடம் போன்றவை பெற்றுப் பேரின்ப வாழ்வு வாழ அருள் பாலிப்பாயாக.

3. கடல் அலை போன்று முழக்கமில்லாத அமைதியான சிவஞானம் எனும் கடலே (வாரியே) தெவிட்டாத அமுதம் போன்றவனே

அல்லி (குமுதம்) மலரைப் போன்ற வாயினை உடைய அழகுமிகு தெய்வயானை அம்மையும், (பொற்கொடியும் வள்ளியம்மையும் (பசுமைக் கொடியும்) வேற்றுமை அற்று இரண்டு பக்கங்களிலும் படர்ந்துள்ள இயற்கை அழகே உருவான பொன்மலை போன்றவரே (முருகர்) வந்தனம்.

4. தலைசிறந்த பெரியோர்களால் புகழப் பெற்ற (தலைவர் புகழ்) சென்னை.

ஊன் பெறும், உயிரும் உணர்ச்சியும் அன்பும்
ஊக்கமும் உண்மையும் என்னைத்
தான் பெறு தாயும் தந்தையும் குருவும்
தனிப்பெருந் தெய்வமுந் தவமும்
வான்பெறு பொருளும் வாழ்வும் நற்றுணையும்
மக்களும் மனைவியும் உறவும்
நான்பெறு நண்பும் யாவும் நீ என்றே
நம்பினேன் கைவிடேல் எனையே.

பாடல் - 8

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப்புறம் ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்

பெருமை பெறும் நினது புகழ்பேச வேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய்பிடியா திருக்க வேண்டும்.

மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்
உனை மறவா திருக்க வேண்டும்
மதி வேண்டும் நின்கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்

தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

நமக்கு வேண்டுவன

1. ஆன்மநேய ஒருமைப் பாட்டுடன் தங்களுடைய அழகிய மென்மைப் பூக்களைப் போன்ற ஒளிவெளி திருவடிகளை எண்ணுகின்ற சான்றோர்களுடைய தொடர்பு வேண்டும்.

2. உள்ளத்தில் ஒன்றை எண்ணிக்கொண்டு வெளியில் மற்றொன்றை சொல்லுகின்ற இழிவான மக்களின் நட்பு என்னோடு ஒன்றாமல், கலவாமல் இருக்க வேண்டும்.

3. சிற்றம்பலம் நம் புருவமத்தியிலிருந்து) இயக்குகிற ஆண்டவரிடம் ஒருமை உணர்வோடு மனதை செலுத்தும் சன்மார்க்கிகள் உறவு வேண்டும். இதை மறந்து புறவழிபாட்டை வற்புறுத்தும் சமயவாதிகள் செயல்பாடு தொடர்புகளை விடவேண்டும்.

சிறப்பு பெற்று போற்றப்படுகின்ற தங்களுடைய பெரும் புகழ்களை பாராட்டி நான் மகிழவேண்டும்.

4. உண்மை யற்றவைகளை நான் உளறாமலிருக்க வேண்டும்.

5. பெருஞ்சித்தி அடைவதற்குரிய நல்லொழுக்கங்களைப் (பெருநெறியை) பின்பற்றுவதில் தவறாமலிருக்க வேண்டும்.

6. சன்மார்க்கப் பெருநெறிக்கு தடையாய் பேதத்தை வளர்க்கும் மதவெறி பிடித்து பேய்போல் ஆடாதிருக்க வேண்டும்.

7. பொருளுக்காக உடலுறவு கொள்ளுகிற (மருவு) விலை மாதர் ஆசையை நினைக்கவே கூடாது.

8. என் அகத்தேயிருந்து இரவும் பகலுமாக கண்ணுங் கருத்துமாக என்னைக் காக்கின்ற தங்களை இடைவிடாது நினைத்து அன்பு காட்ட வேண்டும்.

9. எல்லா உயிர்களும் இன்புற்று வாழ தொண்டாற்றும் பொது அறிவு வேண்டும். 10. இரக்கமே உயிரென நினைத்து பிறர் துயரங்களை போக்குகிற திருவருட் செல்வம் வேண்டும்.

11. என் வாழ்க்கையில் உயிர்ப்பிணி, உள்ளப்பிணி உடற்பிணி போன்றவை ஏற்படாமலிருக்க வேண்டும். 4. பிறருக்கு உபகாரம் செய்வதில் சளைக்காத தருமமிகு சென்னை.

பாடல் - 9

ஈஎன்று நானொருவர் இடம் நின்று கேளாத
இயல்பும் என்னிடம் ஒருவர் ஈது
இடுஎன்ற போது அவர்க்கு இலைஎன்று
சொல்லாமல் இடுகின்ற திறமும் இறையாம்

நீ என்றும் எனைவிடா நிலையும் நான் என்றும் உள்
நினைவிடா நெறியும் அயலார் நிதிஒன்றும்
நயவாத மனமும் மெய்ந்நிலைஎன்றும்
நெகிழாத திடமும் உலகில்

சீ என்று பேய் என்று நாய்என்று பிறர் தமைத்
தீங்கு சொல்லாத தெளிவும்
திறம் ஒன்று வாய்மையுந் தூய்மையுந் தந்து
நின் திருவடிக்கு ஆளாக்குவாய்

தாயொன்று சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

திருவருள் பெறும் திறம்

1. ஒருவரிடம் நான் சென்று என் குடும்பத்திற்காக இதனைக் கொடுத்து (ஈ) உதவுக என இரந்து கேட்காத தன்மையும் .

2. என்னிடம் ஒருவர் வந்து இதனை எனக்குக் கொடுங்கள் என்று கேட்கிறபோது, முடியாது என்று சொல்லாமல் தந்துதவுகிற (இடுதல்) வள்ளல் திறம்வேண்டும்.

3. என் உடலைத் தாங்கி இயக்கிக் காப்பாற்றுகிற தெய்வமே நீர் எந்த நேரத்திலும் என்னைவிட்டுப் பிரியாதிருக்கிற நிலை வேண்டும்.

4. எந்த நேரத்திலும் எதை செய்தாலும் என் உள்ளிருந்து இயக்குகிற தங்களை இடைவிடாது நினைந்தே செயல்பட அருளவேண்டும்.

5. பிறர் வைத்திருக்கும் நிலையற்ற பொருளை (நிதிநயவாத) விரும்பாத உள்ளம் வேண்டும்.

6. சன்மார்க்க மெய்நெறியினை கடைபிடிப்பதில் தளர்ச்சி (நெகிழ்தல்) அடையாது உறுதியான திடம் வேண்டும்.

7. உலகில் நான் பிறர் குற்றங்களை விசாரியாது அவர்களை சீ, பேய், நாய் போன்ற வார்த்தைகளில் புண்படுத்திப் பேசாத தெளிவும், என்னை அவர்கள் அவ்விதம் பேசாத நிலையும் எனக்கருள வேண்டும்.

8. உள்ளதை உள்ளபடி பேசுகின்ற வாய்மையும் பொது உணர்வோடு தூய்மையாகத் தொண்டாற்றும் வல்லபத்தையும் (திறம்) தந்து தங்கள் திருவடிக்குரிய பக்குவனாக அருள்பாலிக்க வேண்டும்.

தன்னை நாடி வருபவர்களைத் தாய் போன்ற உள்ளத்துடன் வரவேற்கிற சென்னை.

" பிச்சையிட்டு உண்ணவும் பின் படுகின்றீர் பின் படுதீமையில் முன் படுகின்றீர். கனிவோடு இரப்போர்க்கு ஈயாமை ஒன்றையே இன்துணை என்பீர். எத்துனை கொள்கின்றீர் பித்துவரே." " ஈகாதல் உடையவர்க்கே இருநிதி அளித்தே இன்புறுகின்ற இறையவரே."

பாடல் - 10

கரையில்வீண் கதையெலா முதிர்கருங்
காக்கைபோல் கதறுவார் கள்ளுண்ட தீக்
கந்தம்நா றிட ஊத்தை காதம்நா றிடஉறு
கடும்பொய் இரு காதம் நாற

வரையில்வாய் கொடுதர்க்க வர்தம் இடுவார்சிவ
மணங்கமழ் மலர்ப்பொன் வாய்க்கு
மவுனம் இடு வார்இவரை மூடர்என ஓதுறு
வழக்குநல் வழக்கெனினும்நான்

உரையில் அவர் தமையுறாது உனதுபுகழ் பேசும்
அவரோடு உறவு பெற அருள்வாய்
உயர் தெய்வயானை யொடுகுறவர் மடமானும்
உள்உவப்புறு குணக்குன்றமே

தரையில் உயர் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

கடவுள் நம்பிக்கையற்றவர்

1. தேவையற்ற கற்பனைக் கதைகளை எல்லையில்லாமல் (கரையில்) கிழமான கருமையான காக்கை கதறுவதைப் போல உரத்து உளறுவார்கள் (கதறுவர்),

மது அருந்தியதால் போதையில் பேசுவதால் கொடிய துர்நாற்றம் வீசும் (தீக்கந்தம்) புலால் உணவு போன்றவைகளை உண்பதால் உணவுக்குடல் கெட்டு வாயில் துர்நாற்றம் (ஊத்தை) அபானகாற்று வெகுதூரம் (காதம்) வீசும். அதையும் மிஞ்சிய கொடுமையான பொய் வதந்திகள் இரண்டு காததூரம் பரவும்.

2. வரையறுத்து பேசாது (வரையில்) மனம் போனபடி வீண்தர்க்க வாதங்கள் பேசுபவர்கள் உண்மையை உணரமாட்டார்கள்.

சிவம் என்பது இயற்கை உண்மை (சி) இயற்கை விளக்கம் (வ) இயற்கை இன்பம் (ம்) உள்ளது விளங்க. சிவம் இல்லாதது விளங்க சவம்.

இயற்கைக் கடவுள் சிவத்தின் புகழ், மணம் வீசுகின்ற மலர் போன்றது. பொன்னிற ஒளியும் மங்கல ஒலியும் கலந்த மெய்ஞ்ஞானிகள் பேச்சுக்கு முன் மௌனமாயிருப்பார்கள்.

3. தீய பண்புகள் உடைய அறிவற்றவர் (மூடர்) என்று சொல்லுகிற (ஓதுறு) வழக்கம் நல்லது என்றாலும். என் வார்த்தைகள் தீயவர்களைப் பற்றிய குற்றங்களைப் பேசாது.

எல்லா உயிர்களினுள்ளே இருக்கும் ஆண்டவரே தங்கள் பெருமைகளை போற்றுதலை பேசுபவர்களோடு ஆன்மநேய உறவுகொள்ளும்படி அருள்பாலிப்பாயாக.

இளவரசி பெருமைக்குரிய தெய்வயானை அம்மையை, குறவர்களின் தலைவரால் வளர்க்கப்பட்ட வள்ளியம்மையை பேதமற்ற உள்ளத்தோடு ஏற்று இன்பமடைகிற நற்குணமலை போன்ற முருகரே வந்தனம்.

4. இந்த உலகில் மெய்ஞ்ஞானிகள் அவதாரத்தில் தோற்றத்தில் சிறந்து விளங்கும் சென்னை (துரையிலுயர்)

பாடல் - 11

நாம்பிரமம் நமையன்றி ஆம்பிரமம் வேறில்லை
நன்மை தீமைகளும் இல்லை
நவில்கின்றவாக்கிய அந்தரம் இரண்டினும்
ஒன்ற நடுநின்ற தென்று வீணாள்

போம்பிரம நீதிகேட் போர்பிரமை யாகவே
போதிப்பர் சாதிப்பர் தாம்
புன்மைநெறி கைவிடார் தம்பிரமம்வினை ஒன்று
போந்திடில் போக விடுவார்

சாம்பிரமமாம் இவர்கள் தாம்பிரமம் எனும் அறிவு
தாம்புபாம் பெனும் அறிவுகாண்
சத்துவ அகண்டபரி பூரணா காரஉப
சாந்தசிவம் சிற்பிரமம் நீ

தாம்பிரிவில் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

சிற்றொளிக்கண்டு ஏமாறாதே

1. நாமே இறைவன் (பிரமம்) நம்மைத் தவிர வேறொரு கடவுளில்லை நல்லவை. கெட்டவை போன்றவை ஒன்றுமில்லை.

கூறப்படுகின்ற (நவில்கின்ற) அகம் பிரம்மாஸ்மி தத்துவமசி என்பன போன்ற இருவகை சொற்றொடர்களிலெல்லாம். (வாக்கிய அந்தரம் இரண்டினும்) பொருந்தும்படி (ஒன்ற) அவற்றின் உட்பொருளாய்நடுநின்று பொருந்தி விளங்குவது அந்தப் பிரமமே.

2. பிரம்மப் பொருள் பற்றி கேட்பவர்களின் நேரத்தை நாட்களைப் பாழாக்க செய்வது பயனற்றது. (வீண்நாள் போம் பிரமநீதி கேட்போர்).

உபதேசிப்பவர் கேட்பவர்கள் பிரமையடையும் படியும் வியப்படையும் படியும் வலியுறுத்தி பேசுபவர் உபதேசித்தப்படி தான் மட்டும் நடக்கமாட்டார்கள். கீழ்த்தரமான செயல்களை (புன்மைநெறி) கைவிட மாட்டார்கள்.

ஒரு தீவினை வந்து தங்களை துன்பப்படுத்தும் போது தீய செயல்களைக் கைவிடுவர் (போகவிடுவர்)

3. இவர்கள் இறந்து போகும் நிலையினை உடையவர்கள் (சாம்பிரமம்) தன்னையே கடவுள் பரம் பொருள் எனக்கூறிக் கொள்கிற அறிவானது இருட்டில் கிடக்கும். தாம்பு கயிற்றைப் பாம்பு என நினைத்து மயங்கும் விபரீத அறிவாகும்.

உண்மைப் பரம்பொருள் பரந்தவெளி (அகண்ட) யில் அருள் ஒளி பரிபூரணமாக நிறைந்து கலந்துள்ளது (சத்துவ அகண்ட பரிபூரணாகார உபசாந்தசிவம்) ,

பொறுமை உருவாயிருக்கின்ற உபசாந்தசிவம் எனும் பொருள் ஞான உருவமுடைய கடவுள் எனும் பரம் பொருளாயுளது.

4. இங்கு வருபவர் விட்டு போவதற்கு மனம் வராதப் சென்னை (தாம்பிரிவில்)

பாடல் - 12

பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டுவந்து
இரப் பார்முகம் பார்த்து இரங்கும்
பண்பும் நின்திருவடிக்கு அன்பும் நிறை
ஆயுளும் பதியும் நன்னிதியும் உணர்வும்

சீர்கொண்ட நிறையும் உட்பொறையும்
மெய்ப்புகழும் நோய்த் தீமை ஒரு சற்றும்
அணுகாத் திறமும் மெய்த்திடமும்நல் இடமும்
நின் அடியர்புகழ் செப்புகின்றோர் அடைவர் காண்

கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலும் மயிலும் ஒரு
கோழியங் கொடியும் விண்ணோர்
கோமான்தன் மகளும் ஒருமாமான் தன்மகளும்
மால் கொண்ட நின்கோலம் மறவேன்

தார்கொண்ட சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

ஈரமும் அன்பும்கொண்டு இன்னருள் பெற்றேன்

1. இந்த உலகத்தின் (பார்) பரிணாம வளர்ச்சியில் (நடை) ஆடம்பர வாழ்வும் வறுண்மயும் உள்ளன. மிக பயங்கர பசியினால் வேதனைப்பட்டு நம்மை நாடி வந்து பிச்சை (இரப்பார்) கேட்பவரின் முகத்தைக் கண்டு இரங்கி, நெகிழ்ந்து பசியைப் போக்குவதாலும்,

என்னை இயக்குகின்ற தங்களின் திருவடிகள் மீது பற்றுக் கொள்வதாலும் ஏற்படும் மரணமிலாப் பெருவாழ்வு நம்மில் பதியும். அருள் செல்வமும் இரக்க உணர்வால் கிடைக்கும்.

2. மேன்மையான பரிபூரண வல்லபமும் அமைதியான அடக்க உணர்வும் சத்தியமான போற்றுதலையுடைய பாராட்டுதல் கிடைக்கும்.

உடல் பிணியால் பாதித்து வேதனைப்படுகிற தன்மை சிறிதும் அணுகாத வல்லபமும் உடல் தளராத நிலையுடைய ஆற்றலும் கிடைக்கும். சான்றோர் குழுவில் இடம் பெறுவர்.

உண்மை உணராது மக்கள் மடிகிறார்களே என இராமலிங்க அடிகளாகிய தங்களின் மூத்தப் பிள்ளை பாடிய இரவும் பகலுமாக அழுது பாடிய பாடலே திருவருட்பா.

நாம் திருவருட்பாவைப் பாடி மனம் நெகிழ்ந்தால் மேற்கூறியவைகளைப் பெறலாம்.

3. கூர்மையான நீண்ட அகன்ற இலைவடிவாய் ஒளிபொருந்திய அறிவும் (வேலும்) மயில் (விந்து) ஒளிபொருந்திய ஓங்கார ஆசனமும், ஒப்பற்ற கோழி (நாதம்) அறியாமையில் தூங்குபவர்களை ஒலி எழுப்பும் கோழி உருவமுடைய கொடியும் உள்ளன.

வானுலக அரசர் தேவேந்திரன் மகள் ஒருபுறமும் ஒப்பற்ற காட்டரசன் வேடுவன் மகள் ஒரு புறமும் பேதமுறாத நிலையில்நிற்கும் நின்னைக் கண்டவர் மயங்கி விரும்பும் தங்களுடைய அழகும் மறக்க முடியாது.

4. சொல் மாலைகளால் (தார்) போற்றப்படும் சென்னை.

பாடல் - 13

வன்பெரு நெருப்பினைப்புன் புழுப்பற்றுமோ
வானை ஒரு மான் தாவு மோ
வலியுள்ள புலியை ஓர் எலிசீறுமோ ? பெரிய
மலையை ஓர் ஈச்சி றகினால்

துன்புற அசைக்குமோ? வச்சிரத் தூண் ஒரு
துரும்பினால் துண்ட மாமோ?
சூரியனை இருள்வந்து சூழுமோ? காற்றில்
மழை தோயுமோ? இல்லை அது போல்

அன்புடைய நின்னடியர் பொன்னடியை உன்னும் அவர்
அடிமலர் முடிக்கணிந் தோர்க்கு
அவலம் உறுமோ? காமம் வெகுளி உறுமோ?
மனத்து அற்பமும் விகற்பம் உறுமோ?

தன்புகழ்செய் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

மேன்மையும் கீழ்மையும்

1. கொழுந்து விட்டெரியும் காட்டுத்தீயினை அற்பமான மலத்திலே புழுத்த புழு நெருங்குமோ,

2. பூமியிலே உலாவும் மான் ஆகாயத்திற்கு தாவி குதித்தோடுமோ,

3. பாயும் பலமிக்க புலியை அற்பமான எலி சீறிப்பாயுமோ,

4. மிக உயர்ந்த மலையை இழிந்த ஈ தன் சிறகினால் அசைத்து துன்புறுத்துமோ இவைகள் ஏதும் நடவாது.

5. சிறு துரும்பு போன்ற உளியால் வச்சிரத்தூணை துண்டிக்க முடியாது.

6. மேகம் போன்ற இருள் சூரியனைச் சுற்றி சூழ்ந்து மறைத்துவிடாது.

7. காற்றடிக்கும் போது மேகம் கலையாமல் நிலைத்து (தோயுமோ) நிற்காது.

3. அன்பு இரக்க வடிவான உன்னுடைய தொண்டர்கள் பொன்னைப்போல் மதிக்கத்தக்க ஒளிவெளி என்ற தங்கள் திருவடிகளை நினைத்துப் போற்றுவதால் (உன்னுமவர்),

அவர்கள் சிரத்தில் அருள் அறிவு அருள் அனுபவம் ஏற்படுவதால் துன்பப்படக் கூடிய இழிநிலை வராது (அவலம்) பெண்ணாசை மயக்கம் வராது.

தன்னையே சாகடிக்கும் கோபம் வராது கீழ்த்தரமான பேத எண்ணங்கள் வராது (அற்பம் விகற்பம்)

4. எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்ற புகழை பரவச் செய்யும் சென்னை. (துன் புகழ்)

உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும்
ஒரு திருப்பொது என அறிந்தேன்
செயிரெலாம் தவிர்த்தேன் திருவெலாம் அடைந்தேன்
சித்தெல்லாம் வல்லது ஒன்று அறிந்தேன்
மயிரெலாம் புளகித்து உளமெலாம் கனிந்து
மலர்ந்தனன் சுத்த சன்மார்க்க
பயிரெலாம் தழைக்கப் பதியெலாம் களிக்க
பாடுகின்றேன் பொதுப் பாட்டே

பாடல் - 14

கானலிடை நீரும்ஒரு கட்டையில் கள்வனும்
காணுறு கயிற்றில் அரவும்
கடிதருகிளிஞ்சிலிடை வெள்ளியும்
பொன்னைக் கதித்தபித் தளையின் இடையும்

மானலில் கண்டு உளம் மயங்கல்போல் கற்பனையை
மாயையில் கண்டு வீணே மனைஎன்றும் மகவு
என்றும் உறவு என்றும் நிதியென்றும்
வாழ்வென்றும் மானம் என்றும்

ஊனலின் உடம்பென்றும் உயிரென்றும் உளமென்றும்
உள்ளென்றும் வெளியென்றும் வான்
உலகென்றும் அளவறு விகாரம் உற நின்ற
எனை உண்மை அறிவித்த குருவே

தானமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

உள்ளதை உள்ளபடி உணர்த்தும் சம்மார்க்கம்

1. பாலைவனமான (கானல்) நீர்வளமற்ற இடமானது கடுவெயிலில் தூரத்தில் நீர்நிலை இருப்பது போல் தோன்றும் நெருங்கிப் பார்த்தால் நீர் இருக்காது.

2. இருட்டில் வெட்டப்பட்டுள்ள மரத்தைக் கண்டு திருடன் என பயப்படுவர்,

3. இருட்டில் தாறுமாறாக உள்ள தாம்புக் கயிற்றைக்கண்டு பாம்பு (அரவு) எனப் பதறுவர்,

4. மாசு நீக்கப்பட்ட கிளிஞ்சல் ஓடு (கடிதரு கிளிஞ்சல்) வெயிலில் வெள்ளி ஓடு போன்று தோன்றும்.

5. மெருகிட்ட பித்தளை (கதித்த பித்தளை) யைக்கண்டு பொன் என்றும் மனோபாவனையால் (மானலிற்கண்டு) கண்டு மயங்குவார்கள்.

3. உடம்பில் ஒரு குறை ஏற்படக்கூடாது என நினைத்தேன். உயிர், உடம்பு, உள்ளம் மூன்றையும் தந்தது இறைவன் என்பதை உணர்வதில்லை அகவாழ்வு, புறவாழ்வு நீதி, மானம் நிலஉலகம், வானுலகம் போன்றவை தெரியாதிருப்பது போன்ற அளவற்ற பேதங்கள் (விகாரம்) நினைத்து ஏங்குகிறேன்.

என் ஆன்மாவில் பரமான்வாக இருந்து ஆன்மநேயத்தோடு இயக்குகிறீர். இதுபோல் புறத்தே உள்ள எல்லா உயிர்களையும் இயக்குவதால் அவைகளிடம் ,

ஆன்மநேயத்தோடு பழகி உள்ளதை உள்ளபடி உணர்ந்து, மெய்நெறி கடைபிடித்து உய் வாயாக (நீடு வாழ்வாயாக என்று குரு நிலையிலிருந்து அறிவிக்கிறீர.

4. உபகார நிலையில் சிறந்த சென்னை (தானமிகு)

கண்ணிற் கலந்தான் கருத்திற் கலந்தான் என்
எண்ணிற் கலந்தே இசைக்கின்றான் - பண்ணிற
கலந்தான் என் பாட்டிற் கலந்தான் உயிரில்
கலந்தான் கருணை கலந்து

பாடல் - 15

கற்றொளிகொள் உணர்வினோர் வேண்டாத இப்பெருங்
கன்ம உடலில் பருவம்நேர்
கண்டழியும் இளமைதான் பகல்வேடமோ
புரைக் கடல் நீர்கொலோ ? கபடமோ?

உற்றொளியின் வெயிலிட்ட மஞ்சளோ? வானிட்ட
ஒருவி(ல்) லோ ? நீர்க்குமிழியோ?
உலைஅனல் பெறக்காற்று உள் ஊதுந்
துருத்தியோஒன்று மறியேன் இதனை நான்

பற்றுறுதியாகக் கொண்டு வனிதையர்கண் வலையினிற்
பட்டுமதி கெட்டு உழன்றே
பாவமே பயில்கின்றது அல்லாது நின்னடிப்
பற்று அணுவும் உற்ற றிகிலேன்

சற்றையகல் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஒங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

திருவருட்பாவே இளமைத் துடிப்பை நிலைக்கச் செய்யும்

சாகாக்கலை நூலான திருவருட்பா போன்றவைகளை ஓதி சிறப்பாக மெய்யறிவு ஒளிவீசும் சான்றோர் நித்திய உயிர் (ஆன்மா) உய்வதற்கு முயலுவார்கள் அநித்திய உடலைப்பற்றி அக்கறைக்கொள்ள மாட்டார்கள்.

1. முன்வினைப் பயனால் ஏற்பட்ட உடலில் இளமை நிலையற்றது.
2. பருவம் பகலில் போட்ட வேடத்தைப் போன்றது மாறுபாடுடையது.
3. உப்பளத்தில் கடல்நீரை உப்பாக மாற்றி அழுக்கை (புரைக் கடல் நீர் அகற்றுவது. போன்றது இளமை.
4. தவறுகளைத் துணிந்து செய்யும் பருவம் வஞ்சனையுடைய (கபடம்) இளமைக் காலமாகும்.
5. பருவம் என்பது மிக்க கோடை வெய்யிலில் நிலையற்ற மஞ்சள் நிறம் ஒளிவீசி மறைவது போன்றது (உற்று ஒளியின் வெயிலிட்ட மஞ்சள்)
6. மழைக்காலத்தில் திடீரென்று பேரிடி இடிக்கும் ஏழுநிறங்களைக் கொண்ட மின்னல் வெட்டு நம் கண்களைப் பறிப்பது போல தோன்றி மறைவது போன்றது.

7. பிள்ளைகள் சோப்பு நீரை துளையுள்ள குச்சியில் ஊதும்போது அழகிய வண்ணக்குமிழ்போன்று தோன்றி உடனே சிதறுவது போன்றது.நீர்க் குமிழி)
8. கொல்லன் உலையில் சிறுதீயை பெருந்தீயாக்க காற்றை உருவாக்க உதவும் துருத்தி உப்புவதும் சப்பையாவதும் போன்றது (காற்றூதும் துருத்தி) பருவத்தின் இளமை நீடிக்கும் உண்மையினை அறியாமலிருக்கிறேன்.
3. இளமையோடு கூடிய உடல் மீது அதிக அளவு பற்று கொண்டு துடிப்பான இளமையுடைய பெண்களின் கண் வலையில் சிக்கி புத்தி இழந்து சோற்றாசையோடு காமச் சேற்றிலே சிக்கினேன். என் வாழ்நாளை சாவிற்குக் காரணமான தவறுகளைச் செய்து காலத்தை வீணாக்கிவிட்டேன். தாய் கருப்பையிலிருந்து இன்றுவரை என் உயிருக்குள் உயிராயிருந்து கண்ணுங்கருத்துமாக காப்பாற்றி வரும் தங்களை இடைவிடாது நினைக்காத பாவத்தை செய்துவிட்டேன். இதனால் என் உயிரைவிட்டு தாங்கள் பிரிவதால் என் உடலைவிட்டு என் உயிர் பிரியப்போகிறது.
4. அற்பத்தனம் (சற்றைஅகல்) சிறிதும் இல்லாத சென்னை.

பாடல் - 16

சடமாகி இன்பந் தராதாகி மிகுபெருஞ்
சஞ்சலா கார மாகிச்
சற்றாகி வெளிமயல் பற்றாகி ஓடும் இத்
தன்மைபெறு செல்வம் அந்தோ

விடமாகி ஒருகபட நடமாகி ஆற்றிடை
விரைந்துசெலும் வெள்ள மாகி
வேலை அலை யாகிஆங் காரவலை
யாகிமுதிர் வேனில்உறு மேக மாகிக்

கடமாய சகடமுறு கால் ஆகி நீடுவாய்க்
காலோடும் நீர் ஆகியே
கற்பிலா மகளிர்போல் பொற்பிலா துழலும் இது
கருதாத வகை அருளுவாய்

தடமேவு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

அருள்பெற முயலுக

1. பொருள் செல்வம் அசையாத உயிரற்ற பொருள்(சடமாகி)
2. இன்பம் தருவது போல உருவாகி அளவிட முடியாத துயரங்களின் தோற்றமாகி (சஞ்சலாகாரமாகி)
3. நொடிப் பொழுதில் கைமாறுவதாகி (சற்றாகி)
4. உலகமாயையில் மயங்கி மண், பெண், பொன் எனும் மூவாசையில் அனுபவிக்கும் பேராசையாகி (வெளிமயல் பற்றாகி)
5. கைவிட்டுச் செல்கிறோம் என உருண்டோடுகிற தன்மை உடையது செல்வம்.
6. ஒருவனைக் கொல்ல விஷம் பயன்படுவது போல பணமே சிலர் சாவதற்கு காரணமாகிறது.
7. ஆணைப் பெண்ணாக்கி பெண்ணை ஆணாக்கி வேடம்தரித்து கூத்தாடி மயக்குவது போல (கபடநடம்) சிலரை மயக்க பணம் பயன்படுகிறது.
8. மழைக்காலத்தில் ஆற்றில் வெள்ளம் திடீரென பெருக்கெடுத்து ஓடி பலவற்றை நாசமாக்குவது போல கஞ்சத்தனமாக பேராசையோடு சேர்த்த பணம் அழியும்,
9. கடலில் ஓயாது அலைவீசுவது போல (வேலை அலை) தருமம் செய்யாத பணத்திற்கு வீணான செலவு ஏற்படும்.

10. அளவிற்கு மீறிய பணத்தால் தெய்வத்தை மதிக்காதவர் அகங்காரவலையில் சிக்கி (ஆங்காரவலை) அழிவர்.

11. முதிர்ந்த வேனிற் காலத்தில் ஏற்படும் மேகம் மழைபொழியாது வீணாவது போல் தக்க சமயத்தில் உதவாதவர் பணம் வீணாகும்.

12. இருசக்கரங்களின் இடையில் குடம் போல்கடம் பொருத்தி இருப்பதால் வண்டி ஓடுகிறது (கடமாய சகடமுறு காலாகி பாவ புண்ணியம் என்ற செயல்களால் உலக நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதற்குக் காரணம் பணமே.

13. நீண்ட வாய்க்காலில் ஓடுகின்ற தண்ணீர் வயலுக்குப் பாயாது தரிசு நிலங்களில் பாய்ந்து நீர் வீணாவதுண்டு கருத்தோடு கவனிக்காததால் பணத்தைப் பயனுள்ள செயலுக்குப் பயன்படுத்த முடியவில்லை.

14. ஒழுக்கமில்லாது (கற்பிலா) பணத்திற்காக பிறரை தழுவுகிற குறிக்கோளின்றி (பொற்பு) திரிகின்ற பெண்களைப் போன்றது பொருள்.

15. இடைவிடாது தங்கள் அருளை நினைத்து (கருதல்) பாடுபடவும் பொருளுக்கு அடிமையாகாமல் இருக்க அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

4. அருள் பாலித்தலில் நீர் நிலைபோன்றது (தடம் மேவு) சென்னை.

பாடல் - 17

உப்புற்ற பாண்டம் என ஒன்பது துவாரத்துள்
உள் அசும்பு ஒழுகும் உடலை
உயர்நின்ற வானிடை எறிந்தகல் என்றும்
மலை உற்றுஇழியும் அருவி என்றும்

வெப்புற்ற காற்றிடை விளக்கென்றும்மேகம் உறு
மின்என்றும் வீசு காற்றின்
மேற்பட்ட பஞ்சென்றும் மஞ்சென்றும்
வினைதந்த வெறுமாய வேடம் என்றும்

கப்புற்ற பறவைக்குடம் பைஎன்றும் பொய்த்த
கனவென்றும் நீரில் எழுதுங் கையெழுத்து
என்றும்உட் கண்டுகொண்டு அதில் ஆசை
கைவிடேன் என்செய்குவேன்

தப்பற்ற சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

திருச்சிற்றம்பலத்தில் மனதை நிறுத்து

1. நாம் சாகாமலிருக்க உடலை வளர்க்க உண்ணும் உணவில் ருசிக்காக உப்பை உபயோகிக்கிறோம். அதனால் உடம்பு உப்புள்ள பாண்டமாகி கரிக்கிறது.

உணவின் சத்து இரத்தமாகிறது. காது, மூக்கு, வாய், குதம் போன்ற ஒன்பது துவாரங்கள் வழியாக சத்தற்றவை கரியமிலவாயு, வியர்வை, மல சலம், சளி, கோழையாக வெளியேறுகிறது. (அசும்பு ஒழுகும் உடலை)

2. அளவிற்கு எட்டாத தூரத்திலுள்ள ஆகாயம் நோக்கி எறியப்பட்ட கல் புவியின் ஈர்ப்பால் கீழ்நோக்கி வந்துவிடுகிறது.

வானளாவிய புகழப்பட்டவர்கள் மண்ணில் அடக்கமாகிறார்கள்.

3. மலையின் உச்சியில் தோன்றிய அருவியும் கீழ்நோக்கி வேகமாக பாயும் (மலை உற்று இழியும்) உழைப்பால் மிக உயர்ந்த நிலை அடைந்தாலும் கீழ்த்தரமான செயலால் தாழ்ந்து விடுகிறார்கள்.

4. பயங்கரமாக வீசும் புயல் காற்றிடையில் உள்ள விளக்கு போன்றது துன்பமும், தொல்லைகளும் நிறைந்த உலகில் வாழ்வது.

5. மழைக்காலத்தில் இடி இடித்து கண்ணைப் பறிக்கும் வானவில் தோன்றி மறைவது (மேகமுறுமின்) போல பிறந்தவுடனே இறப்பது

6. வேகமாக வீசும் காற்றில சிக்கிய பஞ்சு படாதபாடுபடும் அதுபோல பல விஷயங்களை மனதில் எண்ணி கலக்கமுற்று நிம்மதியின்றி வேதனைப்படுவர் உண்டு.

7. பலத்த காற்றால் மேகம் (மஞ்சு) கலைக்கப்பட்டு மழை தடைபடுவதுபோல் எதிர்பார்த்தது கிடைக்கும் என்று எண்ணியவர்களுக்கு கிடைக்காமல்? ஏமாறுவதுண்டு .

8. முன்செய்த நல்வினையால் மனித உடல் கிடைத்தது. இறந்த பிறகு எந்த உடம்பு கிடைக்குமோ (வெறுமாய வேடம்) சொல்ல முடியாது.

சன்மார்க்கி அஜாக்கிரத்தையால் இறந்தால் மீண்டும் மனிதனாய் பிறந்து நித்திய (ஒளி) உடலைப் பெறமுயற்சிப்பர்.

9. மரக்கிளைகளிலுள்ள பறவை கூண்டிலிட்ட முட்டை (கப்புற்ற பறவை குடம்பை) சில சமயம் பாம்பிற்கு இறையாவது போன்றது வாழ்வு.

10. விழித்ததும் மறக்கும் கனவு போன்றது (பொய்த்த கனவு) மனித வாழ்க்கை.

11. ஓடுகின்ற நீரில் எழுதுகின்ற கையெழுத்து கலைவது போன்றது வாழ்வு,, இவைகளைப் படித்தும் கேட்டும் மனதில் பதிந்தும் (உட்கண்டு கொண்டு) உடல் பற்றை (உலகியல்) விடாதிருக்கிறேன்.

12. உடல் பொருள் ஆவி தந்து என்னை தாங்கிக் கொண்டிருக்கும் தங்களை, மறந்த தப்பை செய்யாமலிருக்க செய்வாயாக.

திருச்சிற்றம் பலத்தின்கண் மனதை செலுத்துவதைத் தவிர மற்ற எந்த்வித ஆபாசத்திலும் செலுத்தாது மனதை இழுத்துப் புருவமத்தியில் நிறுத்த வேண்டும்.

4. அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை மறக்கும் தப்பை செய்யாதது சென்னை (தப்பற்றது)

பாடல் - 18

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற் றிருக்கும் வெறுவாய்
எங்கள் பெருமான் உனை வணங்காத
மூடர்தலை இகழ்விறகு எடுக்கும் தலை

கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கள்
கலநீர் சொரிந்த அழுகண்
கடவுள் நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்குஞ் செவி

பந்தமற நினை எணாப் பாவிகள் தம்நெஞ்சம்
பகீரென நடுங்கும் நெஞ்சம்
பரமநின் திருமுன்னர் குவியாத வஞ்சர் கை
பலிஏற்க நீள்கொடுங்கை

சந்தமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

உடல் உயிர் உள்ளம் தந்த அருட்பெருஞ்ஜோதி

1. எல்லா உயிர்களின் அகத்தேயிருந்து கண்ணுங் கருத்துமாகக் காத்து வரும் தந்தையே தங்கள் அருள் பாலிப்பைப் போற்றி புகழ்ந்த பாடல்களை பாடாதவர்கள் வாய்வம்பிற்கு அலைகின்ற பேய் தன்மையுடையது. எளிய ஆகாரமாகிய கூழுக்காக ஏங்கி (ஏக்கம்) காத்து கிடக்கும் வாயாகும்.

2. உலகை உயிரை காற்று தண்ணீர் போன்ற ஐம்பூதங்களால் காக்கும் கடவுளே தங்கள் முன் தலைதாழ்த்திக் கும்பிடாதவர்கள் அறிவற்ற வீணர்களே, அவர்கள் தலை தாழ்வாகக் (இகழ்) கருதப்படும் விறகை விற்க சுமக்கும் தலையாகும்.

3. சுகந்த மணம் வீசுவது போல (கந்தமிகு) திகழும் நின் உருவத்தைப் பார்க்க துடிக்காத கீழ்மக்கள் கண்கள் குடம் நீர் (கலநீர் சொரிந்து) அளவில்லா ஏக்கத்தால் கண்ணீரை சிந்துகின்ற கண்களாகும்.

4. நமக்குள்ளும் புறமும் விளங்கி வேண்டுவதை வாரிவழங்கும் கடவுளைப்பற்றி புகழ்வதை கேட்காதது

செத்துப்போன செய்திகளைக் (கைத்திழவு) கேட்கின்ற **காதுகளாகும்.**

5. கண்மூடி இச்சையில் (மண், பெண், பொன், ஆசை) பற்றை நீக்காமல் (பந்தம்) தங்களை மறக்கும் (எணா) பாவிகள் உள்ளம் திடுக்கிடும் செயலில் (பகீர்) சிக்கி நடுங்கும் **உள்ளமாகும்.**

6. உலகை உயிரை வாழவைக்கும் பரமனே நின் திருவருளை விரும்பி இருகைகளை குவித்து விண்ணப்பிக்காத கொடுமையானவர்கள் கைகள் பிச்சை எடுப்பதற்கு (பலி ஏற்க) பிறர்முன் நீட்டுகின்ற **கைகளாகும்**

4. இனிய இறைவன் நாதத்தை ஒலிக்கும் (சந்தம்) சென்னை.

தொழுதெலாம் வல்ல கடவுளே நின்னைத்
துதித்திலேன் தூய்மை ஒன்று அறியேன்
கழுதெலாம் அனையேன் இழுதெலாம் உணவில்
கலந்துணக் கருதிய கருத்தேன்
பழுதொலாம் புரிந்து பொழுதெலாம் கழித்த
பாவியேன் தீமைகள் சிறிதும்

எழுதெலாம் படித்தன்று என மிக உடையேன்
என்னினும் காத்தருள் எனையே.

பாடல் - 19

ஐயநின் சீர்பேசும் செல்வர்வாய் நல்லதெள்
அமுதுண்டு உவந்த திருவாய்
அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந் தலை

மெய்யநின் திருமேனி கண்ட புண்ணியர் கண்கள்
மிக்கஒளி மேவு கண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபங் கேட்குஞ் செவி

துய்யநின் பதம்எண்ணும் மேலோர்கள்நெஞ்சம்
மெய்ச் சுகரூபமான நெஞ்சம்
தோன்றல் உன்திரு முன் குவித்த பெரியோர்
கைகள் சுவர்ன்னமிடு கின்ற கைகள்

சையமுயர் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

தன்னை அறிந்து இன்பறுக

1. எல்லா உயிர்களினுள் இருந்து இயக்கும் தலைவனே. தங்களின் மாண்பு வல்லபத்தை பாமாலையாக்கும் கல்வி அறிவுச்செல்வம் உடையவர்களின் வாய் சிறந்த தெளிந்த மெய்யறிவு அருளமுதம் அருந்தி களிக்கின்ற திருவாயாகும்.

2. என்னைத் தாங்கும் தந்தையே நின்ஒளி வெளி பாதங்களை (அருள்அறிவு, அருள் அனுபவம்) என் சிரசில் ஏற்றுக்கொண்ட தலை உலகத்தை ஆளுவதற்கான மணிமுடியை தரித்து சிறப்புப்பெற்று வாழ்கின்ற தலையாகும்.

3. மெய்ஞ்ஞான பொருளாய் விளங்குபவனே சன்மார்க்க பரோபகார புண்ணிய செயல் உடையவர்களுக்கே அருள்ஒளி பொருந்திய தங்கள் திருவுருவம் தோற்றமாகும். அவர்கள் கண்கள் விசாரமுள்ள தாய் தயவும் கனிவுமான ஒளிவீசும் கண்களாகும்.

4. வெற்றியே உடைய (வேல்) நின் அருட்புகழை சான்றோர்களின் (வித்தகர்) அருட்பா பாடல்களை கேட்ட காதுகள் மங்கல விழாக்களில் பேரின்பம்

அளிக்கும் இசையை கேட்கும் காதுகளாகும்.

5. மும்மலமற்ற சுத்தமான அருள் அறிவு அருள் அனுபவதிருவடிகளை நினைத்து மகிழும் வித்தகர்கள் உள்ளம் உண்மையான பேரின்ப உருவத்தைக் கண்டு மகிழும் உள்ளமாகும்.

6. அருட்ஜோதியனே, தலைமையில் ஒப்பற்றவனே (தோன்றல்) தீபம் முன்னிலையில் நின்று தங்களை கூப்பிய (குவித்த) கரங்கள் பொற்காசுகளை(சுவர்ணம்) இல்லை எனாது வாரி வழங்கும் கைகளாகும்.

(தன்+ஐ) தன்னையே அறியாப்பிணியால் ஆவி தளர்கின்றனர். தனக்குள் தலைவனாக (ஐ) இருந்து, சிற்றம்பலத்திலிருந்து இயக்குகிறான். (உயிருள்யாம்)

அகவழிபாட்டை (தன்+ஐ) அலட்சியம் செய்து புற வழிபாட்டை செய்பவர்கள் இறக்கிறார்கள் (ஆவி தளரல்) உயிருக்குயிரானவனை உள்ளமும் உடலுறுப்புகளும் போற்றினால் நித்திய வாழ்வு கிடைக்கும்.

4. உயர்ந்த மலைப்போன்ற கட்டடங்களை (சையமுயர்) உடைய சென்னை.

பாடல் - 20

உழல்உற்ற உழவுமுதல் உறுதொழில் இயற்றி மலம்
ஒத்தபல பொருள்ஈட்டி வீண்
உறுவயிறு நிறையவெண் சோறடைத்து
இவ்வுடலை ஒதிபோல் வளர்த்து நாளும்

விழல்உற்ற வாழ்க்கையை விரும்பினேன் ஐயஇவ்
வெய்யஉடல் பொய் என் கிலேன்
வெளிமயக்கோ மாய விடமயக்கோ எனது
விதிமயக்கோ அறிகிலேன்

கழல்உற்ற நின்துணைக் கால்மலர் வணங்கிநின்
கருணையை விழைந்து கொண்டு எம்
களைகணே ஈராறு கண்கொண்ட என்றன்
இரு கண்ணே எனப் புகழ்கிலேன்

தழைவுற்ற சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

இரக்கமும் அன்பும் (ஈராறு) கொண்டு இன்னருள் பெறுக

1. உயிர் வாழச் செய்யும் உணவுப்பொருள்களை பயிர் செய்யாது பணத்திற்காக தரமற்றவைகளை (உழலுற்ற உழவு) பாடுபட்டு பயிர் செய்வதும், அரும்பாடுபட்டு நீதியற்ற முறையில் தொழில் செய்து சம்பாதிப்பது (ஈட்டி) கர்மமலம் (மலமொத்த பொருள்) என்ற பல தீவினைகளை சம்பாதிப்பதாகும்.

பசிக்கு சாப்பிடாமல் வயிறுபுடைக்க, வீங்க ருசியான ஆகாரங்கள் புலால் போன்ற ஆகாரங்களை சாப்பிடுவதும், அதனால் நீண்டு தூங்குவதால் உழைக்க முடியாதபடி (உறுதியற்ற உதவாத ஒதிமரம்) சோம்பலால் பருமனாகும்படி உடலை வளர்த்தேன்.

2. பயனுள்ள பயிரை வளர்க்க நீர் பாய்ச்சாது பயிரை அழிக்கும் களை செடிகளுக்கு நீர்ப்பாய்ச்சி வளர்ப்பதுபோல் தொல்லையான பயனுமற்ற (விழலுற்ற) உலக மருள் வாழ்க்கையை ஆசைப்பட்டு நித்திய உடலைத் தரும் அருள்வாழ்க்கையை மறந்தேன்.

புறத்தே நம்மை புகழ வேண்டும் என்று ஆணவத்தோடு மயங்கினேன். பெண், மண், பொன், போன்ற மாயையெனும் மயக்கமோ. முன் பிறவியின் (கர்மம்) தீவினையின் மயக்கமோ தெரியவில்லை

3. தங்களுடைய இரண்டு மலர் போன்ற திருவடிகள் (கழல்) வஞ்சக மனத்தை நன் மனமாக்கி வெற்றி வாகை ஆபரணத்தை தரித்த திருவடிகள்.

என் இரு கண்களுக்கிடையில் (திருச்சிற்றம்பலத்தில்) இரக்கமும் ஆறுதலும் கொண்ட (ஈர் + ஆறு) கண்களாகபற்று கோடாக (களைகணே) காப்பவரே என போற்றி விரும்பி புகழாமலிருக்கிறேன்.

4. எல்லா நன்மைகளும் சிறந்து தழைத்து விளங்கும் (தழைவுற்ற) சென்னை.

வாட்டமொடு சிறியனேன் செய்வகையை அறியாது
மனமிக மயங்கி ஒரு நாள் மண்ணிற்
கிடந்து அருளை உன்னி உலகியவினை
மறந்து துயில்கின்றபோது

நாட்டமுறு வைகறையில் என் அருகணைந்து
என்னை நன்றுற எழுப்பி மகனே
நல்யோக ஞானம் எனினும் புரிதல்
இன்றி நீ நலிதல் அழகோ எழுந்தே

ஈட்டுக நின் எண்ணம் பலிக்க அருள் அமுதம்
உண்டு இன்புறுக என்றகுருவே
என் ஆசையே என்றன் அன்பே
நிறைந்த பேரின்பமே என் செல்வமே

பாடல் - 21

வானம் எங்கே? அமுத பானம் எங்கே அமரர்
வாழ்க்கை அபிமானம் எங்கே?
மாட்சி எங்கே ? அவர்கள் சூழ்ச்சி எங்கே?
தேவமன்னன் அரசாட்சி எங்கே?

ஞானம்எங்கே? முனிவர்மோனம் எங்கே? அந்த
நான்முகன் செய்கை எங்கே?
நாரணன் காத்தலை நடத்தல் எங்கே? மறை
நவின்றிடும் ஒழுக்கம் எங்கே,

ஈனம்அங் கேசெய்த தாருகனை ஆயிர
இலக்கமுறு சிங்கமுகனை
எண்ணரிய திறல்பெற்ற சூரனை மறக்கருணை
ஈந்துபணி கொண்டி லையெனில்?

தானமிங்கே சென்னைக் கந்தக்கோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே தண்முகத்
துய்யமணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

3. கீழ்த்தரமான (ஈனம்) பல கொடிய செயல்களை பல உலகில் செய்த யானை குணம் போன்ற மதம் கொண்ட தாருகன் என்ற தீயவனை அடக்கினார்.

ஆயிரக்கணக்கான கொடிய இலட்சியங்களைக் கொண்ட இரக்கமற்ற சிங்க குணம் போன்ற சூரனை அடக்கினார். அளவற்ற வல்லபம் பெற்று கொடிய செயல்களைச் செய்த இரக்கமற்ற சூரனை அடக்கினார்.

திருத்துகின்ற அளவில் (மறக்கருணை) தண்டனையை அளித்து கடுந்தவஞ்செய்து வல்லப சக்திகளைப் பெற்ற அவர்களை மயிலாக, சேவலாக, அடிமையாக்கி (பணிகொண்டு) கொண்டார் முருகர். இதனால்,

1. தேவர்கள் எந்தவித தொந்தரவுமின்றி வானுலகில் வாழ்கின்றனர். மேலும் அவர்கள் விரும்பி அருந்துகிற அமுதபானம் கிடைக்கிறது.

அவர்கள் மனம் போனபடி அன்போடு (அபிமானம்) ஆடம்பர களியாட்டங்களை நடத்துகின்றனர்.

தங்களின் பெருமைகளை பாராட்டுதல்களை நடத்துகின்றனர். வானுலகத்தவரே பிறப்பால் உயர்ந்தவர்கள் என்ற நிலையிலிருந்து தாழ்ந்து விடாதிருக்க செய்கிற தந்திரம் (சூழ்ச்சி) நடைபெறுகிறது. தேவர்களின் அரசன் இந்திரனுடைய ஆட்சி நடைபெறுகிறது.

2. மெய்ஞ்ஞானநிலைகள் உபதேசிக்கப்படுகிறது. மனதை சிற்சபையில் நிறுத்துகிற முனிவர்களின் விடாமுயற்சியான் தவம் நடைபெறுகிறது.

நான்முக பிரமன் படைக்கும் தொழில் நடத்த முடிகிறது. நாரணனாகிய திருமால் காத்தல் தொழில் நடத்த முடிகிறது. வேதாகமங்களை எடுத்துரைக்கும் சம்பிரதாய சடங்குகள் ஒழுக்கங்கள் நடைபெறுகின்றன.

4. உபகாரம் செய்வதில் உயர்ந்த சென்னை (தானம்)

பாடல் - 22

மனமான ஒருசிறுவன் மதியான குருவையும்
மதித்திடான் நின் அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மா இரான் காம
மடுவினிடை வீழ்ந்து சுழல்வான்

சினமான வெஞ்சுரத்து உழலுவான் உலோபமாஞ்
சிறுகுகையின் ஊடு புகுவான் செறுமோக
இருளிடைச் செல்குவான் மதம் எனுஞ்
செய்குன்றில் ஏறி விழுவான்

இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே
இறங்குவான் சிறிதும் அந்தோ என்சொல்
கேளான் எனது கைப்படான் மற்றிதற்கு
ஏழையேன் என்செய்குவேன்

தனம்நீடு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே தண்முகத்
துய்யமணி உண்முகச்
சைவமணி சண்முகத் தெய்வ மணியே

வன்புடை மனம் நன் மனமாக அக வழிபாடு

மனம் என்கிற அறியாமைச் சிறுவன் தெளிவாக எதையும் செய்வதில்லை. தன்னுள் இருக்கிற புத்தி என்கிற குரு சொல்கிற நல்ல விளக்கங்களுக்கு (மனசாட்சி) கீழ்படிவதில்லை.

தீயமனமுடையவன் இரக்கம், அன்புடைய மனமாக திருந்திய போது தன்னுள் இருக்கிற இறைவன் அருள் அறிவு அருள் அனுபவ திருவடி மெய்ஞ்ஞான கல்வி அவன் சிரசில் பதிந்து பேரின்ப வாழ்வை பெறுகிறான்.

தீய மனம் உடையவர்கள் நிலையினைப் பார்ப்போம்.

1. **சிற்றின்ப** மனமுடையவன். பேய்போல் அலைந்து கருநிலை எனும் சேற்றில் சிக்கி கலங்கி சுழல்கிறான்.

2. கண் பிதுங்குமளவு இரத்தம் கொதிக்குமளவு **கோபம்** கொள்பவன் துடிதுடித்து (வெஞ்சுரத்து) உழல்வான்.

3. கொடிய விலங்குகள் வெளியே தலைகாட்ட பயந்து குகையில் பதுங்கி வாழ்வது போல சுற்றத்தார் நண்பர்களின் தொடர்பு கொண்டால் பணம் செலவாகும் என அஞ்சிதனித்து வாழ்வார்கள். **கஞ்சத்தனம்** உடையவர்கள் (உலோபத்தன்மை)

4. பணப் பேராசையுடையவன் **(மோகம்)** பகலிரவு என்று பாராது பணம் சேர்ப்பதில் கருத்தாயிருப்பான்.

5. உயர்ந்த மலையில் ஏறி கீழே விழுந்து சாவது போல் **ஆணவத் (மதம்)** திமிர் கொண்டு நிலை தடுமாறி சாவான்.

6. **மாச்சரியம்** எனும் சந்தேகமுடையவன் கொடிய பள்ளத்தாக்கில் சிக்குவான்.

மனமாகிய சிறுவன் என் சொல்லை கேளாமலிருக்கிறான். என் வசப்படாமல் இருக்கிறான்.

இதற்கு எளியேனாகிய நான் என் செய்வேன். என் வன்புடை மனத்தை நன்மனமாக்கி என் வசம் செய்வித்தருளிய மணிமன்றத்தவரே.

அருட்பெருஞ் ஜோதி நம் சிற்றம்பலத்தில் (புருவ மத்தியில்) இருக்கிறார் என்பது உணர்ந்தேன். அகவழிபாடே சிறந்தது.

7 . செல்வ செழிப்பில் மிகுந்தது சென்னை.

பாடல் - 23

வாய்கொண்டு உரைத்தலரிது என்செய்கேன்
என் செய்கேன் வள்ளல் உன்சேவடிக்கண்
மன்னாது பொன்னாசை மண்ணாசை
பெண்ணாசை வாய்ந்துழலும் எனது மனது

பேய்கொண்டு கள்ளுண்டு கோலினால் மொத்துண்டு
பித்துண்ட வன்குரங்கோ?
பேசுறு குலாலனாற் சுழல்கின்ற திகிரியோ?
பேதைவிளை யாடு பந்தோ?

காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங்கோ? பெருங்
காற்றினால் சுழல் கறங்கோ?
கால(ன்)வடிவோ? இந்திர ஜாலவடிவோ?
எனது கர்மவடிவோ? அறிகி லேன்

தாய்கொண்ட சென்னையில் கந்த கோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

உலக மாயையில் மயங்கும் மனம்

அருட்செல்வத்தை வாரி வழங்கும் வள்ளலே! என்னுடைய மனமாயை தங்களுடைய திருவடியில் சரணடையாதது பொருந்தாதது (மன்னாது) பொன், பெண்,மண், போன்ற உலக மாயையில் மயங்கி அலைகிறது (உழலுதல்)

மனதினால் நான் படும்பாடுகளை என்னவென்று சொல்வேன் புரியவில்லை. வாயால் சொல்ல மனதால் நினைக்க முடியவில்லை.

1. இருட்டில் பிறர் கண்ணுக்கு தெரியாமல் பயங்கர குரல் எழுப்பி அலையும் பேயோ.

2. கள்ளுண்ட போதையால் நிலைத்தடுமாறி விழுகிற மனமோ.

3. பைத்தியம் பிடித்து தாவிக்கொண்டே சேட்டைகள் செய்வதால் குரங்காட்டி கோலினால் அடிப்பட்ட (மொத்துண்ட) குரங்கோ

4. மண்ணினால் மக்களை ஈர்க்கும் வடிவங்களை உருவாக்குபவன் என புகழப்படும் குயவனால் சுற்றப்படும் சக்கரமோ (குலாலனால் சுழல் திகிரியோ)

5. ஒன்றுமறியாத பாலகனால் தாறுமாறாக விளையாடப்படும் பந்தோ.

6. அச்சத்தால் கோபங்கொண்டு (காய்கொண்டு) வெறிகொண்டு பாய்கின்ற பயங்கர மிருகமோ

7. பலத்த காற்றினால் சிக்கி சுழல்கின்ற காற்றாடியோ (கறங்கோ)

8. உயிரை பறிக்கும் எமன் உருவமோ

9. மாயாசாலத் தந்திரத்தின் (இந்திர ஜாலம்) சூழ்ச்சியோ

10. முன்செய்த தீவினை (கர்மம்) யின் பயனோ ஏதொன்றும் தெரியாமலிருக்கிறேன்.

4. தயவே வடிவான மக்களைக் கொண்ட
சென்னை (தாய்கொண்ட)

உருள் சகடாகிய உளஞ்சலியாவகை
அருள்வழி நிறுத்திய அருட்பெருஞ்ஜோதி
வெருள் மனமாயை வினை இருள் நீக்கியுள்
அருள் விளக்கேற்றிய அருட்பெருஞ்ஜோதி
சுருள் விரி உடைமனச் சுழல் எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி

பாடல் - 24

கற்ற மேலவரொடுங் கூடிநில் லேன் கல்வி
கற்கும் நெறி தேர்ந்து கல்லேன்
கனிவுகொண்டு உனது திருவடியை ஒரு
கனவினும் கருதிலேன் நல்லன் அல்லேன்

குற்றமே செய்வதென் குணமாகும் அப்பெருங்
குற்றமெல் லாம் குணமெனக்
கொள்ளுவது நின் அருட்குணமாகும் என்னில்
என் குறை தவிர்த்து அருள்புரிகுவாய்

பெற்றமேல் வரும் ஒரு பெருந்தகையின் அருளுருப்
பெற்றெழுந் தோங்கு சுடரே
பிரணவாகார சின்மய விமல சொரூபமே
பேதமில் பரப்பி ரமமே

தற்றகைய சென்னையில் கந்த கோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே !

அருட்ஜோதி சிவம்

1. அருட்கல்வி அறிவு ஒளிப்பெற்ற சிறந்த சான்றோர்களுடன் பழகி முன்னேறாமலிருக்கிறேன்

2. சாகாக்கல்வியான அருட்கல்வியை அளிக்கும் திருவருட்பா சன்மார்க்க நெறியினைச் சார்ந்து சத்விசார மூலம் ஆராய்ந்து (தேர்ந்து) பயிலவில்லை.

3. தங்கள்மீது அன்பும் என்னைச் சார்ந்தவர்களிடம் இரக்கமும் கொண்டு (கனிவு) அதன்மூலம் தங்களது திருவடியாகிய அருள் அறிவு அருள் அனுபவம் பெற ஒருநாளும் நினைத்ததில்லை. கனவிலும் கண்டதில்லை. நான் நல்லவன் இல்லை.

4. முன்செய்த தீவினையின் இயல்பால், அறியாமையால் தவறுகள் செய்யும் குணத்தைப் பெற்றிருக்கிறேன். அத்தவறுகளை பிள்ளை விளையாட்டாகக் கருதி எப்படியும் திருந்துவான் என்று நினைப்பது கருணையே வடிவமான தங்கள் திருவருள் இயல்பாகும்.

5. இது உண்மை என்றால் என் வன்புடை மனத்தை நன்மனமாக்க அருள்பாலிப்பாயாக. தவறு செய்தாலும் இடைவிடாது தங்களையே நினைக்கிறேன். நம்புகிறேன்.

6. ஆண்டவரிடத்தில் அன்பும் உயிர்களிடத்தில் இரக்கமும் காட்டி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருளை பரிபூரணமாகப் பெற்றவர்கள் நித்தியவாழ்வை அருட்பிரகாச ஒளிவடிவை பெறுகிறார்கள்.

7. பிறருக்கு ஏற்படும் அச்சம், துயரத்தை நீக்குகிற வல்லப சக்திகளைப் பெற்று ஓங்குகிற சுடராக விளங்குகிறீர். ஓம் எனும் பிரணவ ஒளிவடிவில் மெய்ஞ்ஞான அருட்பிரகாசமாய் விளங்குபவரே.

இயற்கையிலேயே மலமற்ற சுத்த வடிவமானவரே (சொரூபம்) தன்னை பெரிதாகக்கருதாது அடியவர் என்ற பேதமில்லாது அவர் உள்ளத்தில் இடங்கொண்ட அருட்பெருஞ்ஜோதி சிவமே

4. (தன்தகைய) தனக்கு ஒப்பாக உயர்வாக இல்லாத சென்னை.

பாடல் - 25

பாய்ப்பட்ட புலிஅன்ன நாய்ப்பட்ட கயவர் தம்
பாழ்ப்பட்ட மனையில் நெடுநாள்
பண்பட்ட கழுநீரும் விண்பட்ட இன்னமுது
பட்டபா டாகும் அன்றிப்

போய்ப்பட்ட புல்லுமணி பூப்பட்ட பாடும்நற்
பூண்பட்ட பாடு தவிடும்
புண்பட்ட உமியும் உயர் பொன்பட்டபாடு
அவர்கள் போகமொரு போக மாமோ?

ஆய்ப்பட்ட மறைமுடிச் சேய்ப்பட்ட நின்னடிக்கு
ஆட்பட்ட பெருவாழ்விலே
அருள்பட்ட நெறியும் மெய்ப்பொருள்பட்ட
நிலையும்உற, அமர்போகமே போகமாம்

தாய்ப்பட்ட சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச்
சைவமணி சண்முகத் தெய்வ மணியே

இரக்கமற்றதே கஞ்சத்தனம்

காசுதான் நம்மை காக்கும் கடவுள் எனக்கொண்டு கஞ்சத்தன வாழ்க்கை நடத்துபவர்கள் உண்டு. அவர்கள் பணத்தைப் பெருக்க வட்டிக்குவிட்டு நாய்ப் போல் திரிந்து பாயும் புலிபோல (பாய்பட்ட) உறுமி மிரட்டி வசூல் செய்து ஒன்றுக்கு பத்தாக முயலுபவர்கள் இழிந்த மக்களே அவர்களுக்கு பாழடைந்த குட்டிச்சுவரே வீடாகும்.

1. பல நாட்களாகப் பக்குவப்படுத்தி (பண்பட்ட) சோறு வடித்த நீரை (கழுநீர்) வானுலக தேவர்கள் அருந்தும் அமுதத்தைப்போல் பருகுவர்.

2. மேலும் (அன்றி) பலநாட்களுக்குமுன் முற்றியபுல்லில் கிடைக்கும் தானிய மணிகளை பூவை வாடாமல் பாதுகாப்பதுபோல பத்திரமாக பாதுகாப்பார்கள் (போய்பட்ட புல்லுமணி)

3. உரலில் நெல்லை உலக்கையில் குத்தும்போது உலக்கைப் பூணில் ஒட்டிய தவிட்டையும் ஒதுக்கப்பட வேண்டிய உமியையும் தங்கத்தைப் பாதுகாப்பதுபோல் பாதுகாப்பர்.

இதுபோன்ற நிலையில் வாழ்வதே பெரும்போகம் என்பது அவர்கள் அறியாமையாகும். வேதாகமங்களால் சிந்தித்து ஆராயப்பட்ட முடிவுகளுக்கு (ஆய்ப்பட்ட) எட்டாதது (சேய்ப்பட்ட) அருள் அறிவு அருள் அனுபவ திருவடிகளுக்கு தகுதி உடைவர்களாகுவதே, (ஆட்பட்ட) பேரின்ப பெருவாழ்வாகும்,

ஆண்டவரை இடைவிடாது நினைக்கிற அன்பும் உயிர்களுக்கு இரக்கத்தோடு செய்கிற உபகாரத்தின் மூலம் பெறுகிற திருவருளால் அவ்வாழ்வை பெறவேண்டும்.

சன்மார்க்க மெய்நெறியை கடைப்பிடித்து மெய்ப்பொருளை காண்பதில் உறுதிகொள்ளுதலே (அமர்) சிறந்தது. அதன்மூலம் கிடைக்கும் பேரின்ப வாழ்வே பெரும் போகமாகும். (தாய்ப்பட்ட) தாய்போல் அணைப்பது சென்னை.

உடுத்திலேம் சிறிதும் உண்டிலேம் என வந்து
ஓதிய வறிஞருக்கு ஏதும்
கொடுத்திலேன் கொடுக்கும் குறிப்பிலேன்
உலகில் குணம் பெரிதுடைய நல்லோரை
அடுத்திலேன் அடுத்தற்கு ஆசையும் இல்லேன்
அவனிமேல் நல்லவன் எனப்பேர்
எடுத்திலேன் எனினும் தெய்வமே
துணை என்றிருக்கின்றேன் காத்தருள் எனையே

பாடல் - 26

சேவலங் கொடி கொண்ட நினை அன்றிவேறு சிறு
தேவரைச் சிந்தை செய்வோர்
செங்கனியை விட்டு வேப்பங் கனியை
உண்ணும் ஓர் சிறுகருங் காக்கை நிகர்வார்

நாவலங் காரம்அற வேறுபுகழ் பேசிநின்
நற்புகழ் வழுத்தாத பேர்
நாய்ப்பால் விரும்பி ஆன் தூய்ப்பாலை
நயவாத நவையுடைப் பேயர் ஆவர்

நீ வலந்தர நினது குற்றேவல் புரியாது
நின்று மற்றேவல் புரிவோர்
நெல்லுக் கிறைக்காது புல்லுக் கிறைக்கின்ற
நெடிய வெறு வீணராவார்

தாவலஞ்சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

திருச்சிற்றம்பலம் அருட்பெருஞ்ஜோதி

1. தனிப்பேரருட் செங்கோல் செலுத்தும் சுத்த சன்மார்க்க கோட்டைக்கொடியே, ஜோதிக்கொடியே, எல்லாம் செய் வல்லாரிடம் சேர் மணிக்கொடியே என்பது திருவருட்பா இதனை சேவலங்கொடி எனலாம். (சே+வலம்+கொடி)

ஆண்டவர் திருவருள் வல்லபத்தை சேர்ப்பது, பெற்றுத்தருவது எனலாம். விடுத்திடில் என்னை நீ, விடுப்பன் என் உயிரை (திருவருட்பா) அருட் பெருஞ்ஜோதி ஆண்டவர் ஒருவருக்கே இந்த வல்லபம் (வலம்) உண்டு.

அகத்தே இருந்து அருள்பாலிக்கிற தங்களைத் தவிர மற்ற சமய மதத்தவர் குறிப்பிடும் தெய்வங்களை தொழுபவர்கள் கனிந்த மாம்பழம் சிவந்த கோவைப்பழம் போன்றவைகளை ஒதுக்கி வேப்பங்கனியை உண்ணுகின்ற கருமையான சிறிய காக்கைக்கு ஒப்பாகக் கூறலாம்.

2. நம்முள்ளிருந்து இயக்கும் இறைவன் திருவருட் செயல்பாடுகளை பாமாலையாக இயற்றி போற்றி (வழுத்தல்) பாடும் வாயினை (பிரதானமாக) உடையவர் போற்றப்படுகிறார் (நாவலங்காரம்) .

அப்படியின்றி சிறிய தெய்வங்களை போற்றி புகழ்பவர் அற்பத்தனமாக கேவலமாகக் கருதப்படும் கண்டதை சாப்பிடும் நாயின் பாலை விரும்புவர்.

தாவரங்களை மட்டும் உண்டு அமைதியே உருவமாக வாழும் பசுவின் தூய்மையான பாலை (ஆவின் பால்) விரும்பாதவர்கள் (நயவாதவர்) கீழ்த்தரமான மாமிசவாசனையை விரும்பி இருட்டில் அலையும் பேயினை ஒத்தவர்கள்.

3. எல்லாம் செய் வல்லபத்தை (சித்தி) எனக்களித்த பதியை ஓர் உறவென்று (தாய், தந்தை) போற்றி மகிழ்ந்திருங்கள். இதுதான் நீ வலம் தர என்பது,

நம்முள்ளிருப்பவர் நமக்கிடும் உயிர் நலப்பணியை (குற்றேவல்). நமக்கு அளித்த வல்லபத்தைக்கொண்டு நம் சக்திகேற்றளவு பிறர் துயர் அச்சத்தை நீக்க வேண்டும்.

இதை விடுத்து சமய பேதங்களை வளர்க்கும் கற்பனை தெய்வங்களுக்காக பாடுபடுபவர்.மக்களை வாழ்விக்கும் உணவுப்பொருள் உற்பத்திக்காக பாடுபட்டு நீர் இறைக்காது பயனற்ற தானாக விளையும் புல்லக்கு நீர் இறைத்து வீண் காலத்தை போக்குபவர்கள் ஆவர். (நெல்லுக்கு இறைக்காது புல்லுக்கு இறைத்தல்)

நம்மை கண்ணுங்கருத்துமாக காப்பவனை நம்பி கடைத்தேறாமல் காலத்தை வீணாக்குபவர்கள் ஆவார்.

4. குற்றமற்ற (தூவலம்) சிறப்புடைய சென்னை.

எந்த வகை செய்திடிற் கருணை எந்தாய்
நீ தான் இரங்கு வையோ
அந்தவகையை நான் அறியேன்
அறிவிப்பாரும் எனக்கிலை
இந்தவனக இங்கையோ நான் இருந்தால்
பின்னர் என் செய்வேன்
பந்தவகை அற்றவர் உளத்தே
நடிக்கும் உண்மைப் பரம்பொருளே

பாடல் - 27

பிரமன் இனி என்னைப் பிறப்பிக்க வல்லனோ
பெய்சிறையில் இன்னும் ஒருகால்
பின்பட்டு நிற்குமோ ? முன்பட்ட குட்டில்
பெருந்துயர் மறந்து விடுமோ?

இரவுநிறம் உடை இயமன் இனி என்னைக் கனவினும்
இறப்பிக்க எண்ணம் உறுமோ?
எண்ணுறான் உதையுண்டு சிதையுண்ட
தன்உடல் இருந்தவடு எண்ணு றானோ?

கரவுபெறு வினைவந்து நலியுமோ? அதனை ஒரு
காசுக்கு மதியேன் எலாம்
கற்றவர்கள் பற்றும் நின் திருவருளை யானுங்
கலந்திடப்பெற்று நின்றேன்

தரமருவு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே !

இறப்பு பிறப்பகற்றும் அகவழிபாடு

3. (எழுமையினும் விடாத நட்பே) உயிர்கள் எந்தப்பிறவி எடுத்தாலும் தாங்கள் தொடர்ந்துவந்து கண்ணுங்கருத்துமாக காக்கின்றீர்கள்.

கற்க கசடற கற்றபின் நிற்க அதற்குத்தக என்ற நிலையில் உள்ள சான்றோர்கள். மெய்ஞ்ஞானிகள் உள்ளத்தை தூய்மையாக்கி தங்கள் திருவருளைப்பெற முயலுகிறவர்கள். தங்கள் திருவருள் முன்னிலையில் ஓதாது உணர்ந்த நான் அவர்களுக்கு ஒப்பாக மட்டுமின்றி உயர்ந்து எல்லா வல்லபமும் பெற்றுள்ளேன்.

எந்த ஆபாசத்திலும் மனதை செலுத்தாது இடைவிடாது சிற்றம்பலத்தில் மனதை செலுத்த வேண்டும்.

முற்பிறவியில் செய்த வினை நிழல்போல மறைந்து (கரவு பெறுவினை) வந்து தொல்லைகளை துயரங்களைத் தர முடியாது (நலியுமோ).

அந்த விதியை செல்லாத காசை விட அற்பமாக நினைத்து ஒதுக்கலாம், (ஒரு காசுக்கு மதியேன்)

2. கருமை (இரவு) நிறமுடைய கூற்றுவனால் (இயமன்) மரணம் ஏற்படுகிறது. (மை அகத்தேயுறும்) மரணவாதனை) மை என்பது இருள், அறியாமை, கருமை, வஞ்சகம் எனலாம். உயிருக்குள் உயிராக உள் ஒளியாக ஆண்டவரிருந்து இயக்குகிறார்.

உள்ஒளியை உள்ளம் இடைவிடாது நினைத்து, பசி தவிர்த்தல் போன்ற உபகாரச் செயலில் உடல் ஈடுபட்டால் நித்திய வாழ்வு கிடைக்கும்.

உலகமாயையில் மயங்கி உள்ளிருந்து காப்பவனை மறக்கிறது. வஞ்சக மனம். உடல் உள்ளம் உயிர் ஒன்றாமல் கூறுபடுவதுதான் கூற்றுவன் வருவதாகும்.

உயிருடன் உள்ளமும் உடலும் ஒன்றும் போது அருட்ஜோதியால் வேதிக்கப்படுகிறார்.

அவர் தூங்கும்போது ஏற்படும் கனவிலும் கூட எமன் இறப்பிக்க அச்சுறுத்த எண்ணமாட்டான். இயமன் உலகபாசக்கயிற்றை மார்க்கண்டேயன் உயிரைப் பறிக்க வீசினான்.

சிவலிங்கத்தை கட்டித்தழுவிக் கொண்டிருந்த மார்க்கண்டேயனிடம் அக்கயிறு நெருங்க முடியவில்லை

சிவனார் வெகுண்டு இயமனை காலால் உதைத்தார்.

இயமன் உடல் நொறுங்கி பெருங்காயம் ஏற்பட்டு (சிதையுண்டு வடு ஏற்படல்) வருந்தினார் என்பது வரலாறு கூறும் உண்மை.

1. உள் ஒளியின் திருவருளால் இறப்பை வென்றவர்களை படைக்கும் தொழிலையும் பிரமனால் பிறப்பிக்கச் செய்ய முடியாது. இறப்பில்லையேல் பிறப்பில்லை.

ஓம் என்ற பிரணவத்திற்கு விளக்கம் சொல்ல முடியாமல் முருகப்பெருமானால் தலையில்குட்டு வாங்கினான் பிரமன்.

மேலும் சிறையில் அடைக்கப்பட்டு (பெய்சிறை) அதனால் ஏற்பட்ட துன்பத்தை மறந்துவிட்டானோ மாயையால் வினையால் அரிபிரமாதியர் மனம் மதிமயங்கி தீய காரியங்கள் செய்துள்ளனர் (திருவருட்பா)

(தூமருவு) உயர்வு பொருந்திய சென்னை.

பாடல் - 28

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன் உண்டு பலனும்உண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையும் உண்டு

ஊர் உண்டு பேர் உண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையும் உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்
உறும் உளம்உண்டு வளமும் உண்டு

தேர் உண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும் உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும்
நின்பதத் தியான முண்டாயில் அரசே

தார்உண்ட சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

3. தேனீக்கள் மணமும் தேனுமுள்ள மலர்களில் தேனைப் பருகித் தேனைச் சேகரிக்கும். அது மக்களின் நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. அது போன்று சன்மார்க்க சான்றோர்கள் உண்டு. சாதாரண ஈ சுவைமிக்க பொருளிலும், மலத்திலும் மொய்க்கும். அதனால் சிலரை ஈயினும் இழிந்தவன் என்கின்றனர்.

அருள் அறிவு, அருள் அனுபவம் என்கிற ஆண்டவர் திருவடிகளை தங்கள் சிரசில் சூட்டிக்கொள்பவர் கொலை புலை தவிர்த்த அடியவர்கள்.

சிற்றம்பலத்தில் (புருவ மத்தியில்) உள்ள உள்ஒளியில் பற்றாகி அங்கு மனதை இடைவிடாது செலுத்தி, நினைத்து இறை அன்பை வெளிப்படுத்தி சரணடைவர். (கடம் பணியும் நின் பதத் தியான முண்டாயிலரசே) சிற்றம்பலத்தில் (சிற்சபை) அருள்மெய்ஞ்ஞான விளையாட்டை ஆடி அருளமுதம் வல்லப சக்திகளைத் தந்து நித்திய வாழ்வளிக்கிறார்.

பொன்னம்பலம் (பொற்சபை) என்பது வானிலுள்ள அருள்பெரு வெளிதலத்தில் தான விளையாட்டை ஆடுகிறார். காற்று அக்கினி போன்ற ஐம்பூதங்கள் ஒழுங்காக இயங்கும்படி செய்து அருள்பாலிக்கிறார்.

ஐம்பூதங்கள் இல்லையேல் உயிர்களும் இல்லை. உலகமும் இல்லை. (வானலால் வேறொன்றில்லை) எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்று பிரார்த்தனை செய்வதால் அகவழிபாட்டால் கீழே குறிப்பிட்டவைகள் அருட்பெருஞ்ஜோதி அண்டவர் திருவருளால் கிடைக்கின்றன.

1. கடல், ஆறு போன்ற நீர்நிலைகளிலுள்ள நீரை சூரியன், காற்று போன்றவகைளால் உறிஞ்சப்பட்டு மேகமாக (கார்) மாறுகிறது. குறிப்பிட்ட காலங்களில் மழை பொழியும்.

2. இதற்குள் உழவர்கள் நிலத்தை பண்படுத்தி வைப்பார்கள் பயிர்கள் நன்றாக விளையும்.

3. நீதி நேர்மையோடு மக்கள் பணம் சம்பாதிப்பார்கள்.

4. இறைவர் அன்பு, கருணை, அறிவு போன்ற அருவுருவாய் நம்முள்ளிலிருந்து நம்மை இயக்குகிறார். நாமும் அவர் திருவருளைப்பெற அவரை இடைவிடாது நினைக்கிற அன்பும் உயிர்களிடம் இரக்கமும் காட்ட வேண்டும்.

5. மக்கள் மெய்ஞ்ஞான நூல்களைக் கற்றவர்களாக இருப்பார்கள்.

6. மக்கள் சன்மார்க்க மெய்நெறிகளை கடைப்பிடித்து அதுவே நம்மை உய்விக்குமென (கதி) நம்பி உலகம் போற்றும்வகையில் வாழ்வர்.

7. வறுமையற்ற நாடாகத் திகழும்

8. பேரும் புகழும் பெற்றவர்களாக மக்கள் திகழ்வார்கள்.

9. அந்நாட்டு புகழ் மணிபோல் ஒளி வீசும்.

10. பிறநாட்டிற்கு உபகாரம் செய்யும் தொண்டில் (பணி) ஈடுபடுவர். 11. நல்ல ஆடை அணிகளை அணிவர்.

12. உபகாரம் வேண்டி வருபவர்களுக்கு தயங்காது கொடுப்பார்

13. நோய்களை, பாவங்களைச் சேர்க்கும் மாமிச உணவை உண்டு துன்பப்படாமல் எளிய தாவர உணவு உண்டு மகிழ்வர்.

14. கொலை புலை தவிர்த்ததால் பொறுமை அமைதி உடையவராய் ஆன்ம நேயத்தோடு வறுமையின்றி வளமுடன் வாழ்வர். இதனால் இயற்கை சீற்றம் ஏற்படுவதில்லை பேரழிவு நிகழ்வதில்லை.

15. காலாட்படை (தேர்) யானை, (கரி) குதிரைப்படை (பரி) போன்றவை போரில் எதிரிகளை அழிக்க உருவாக்கப்பட்ட படைகள்.

16. ஆன்ம நேயத்தோடு வாழ்வதால் இப்படைகள் ஆக்கப் பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. அகவழிபாட்டு பிரார்த்தனை செய்யும் நாடு மேற்குறிப்பிட்ட எல்லாவித செல்வங்களை குறைவின்றி பெற்று திகழும். உயிர்களை நாட்டை உறவாக மதிக்காது அழிக்க விஞ்ஞானத்தை பயன்படுத்தினால் இயற்கை சீற்றம் ஏற்படும்.

சார் உலக வாதனையைத் தவிர்த்தவர் உள்ளகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தமசற்குருவை
நேர் உறவே எவராலும் கண்டு கொளற்கரிதாம்
நித்தியவான் பொருளை எலா நிலைகளும் தானாகி
ஏர் உறவே விளங்குகின்ற இயற்கை உண்மை தன்னை
எல்லாம செய் வல்லபத்தை எனக்களித்த பதியை
ஓர் ஊறவென்று உலகீர் போற்றி மகிழ்ந்திடுமின்
உள்ளம் எலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே

பாடல் - 29

உளம்எனது வசம்நின்ற தில்லையென் தொல்லை வினை
ஒல்லை விட்டிடவும் இல்லை
உன்பதத் துஅன்பில்லை என்றனுக்கு
உற்றதுணை உனையன்றி வேறு இல்லை

இளையன் அவனுக்கு அருள் வேண்டும் என்று உன்பால்
இசைக்கின்ற பேரும் இல்லை
ஏழை அவனுக்கு அருள்வதேன் என்று உன்
எதிர் நின்று இயம்புகின் றோரும் இல்லை

வளமருவும் உனது திருவருள் குறைவதில்லை மேல்
மற்றொரு வழக்கும் இல்லை
வந்து இரப்போர்களுக்கு இலை யென்பதில்லை
நீ வன்மனத் தவனும் அல்லை

தளர்விலாச் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே

திருவருள் அலாது அணுவும் அசையாது

ஆண்டவர் ஒருவரே அவரே அருட்பெருஞ்ஜோதி தாய் கருப்பையினுள் தங்கிய உயிர்களை ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி (உள்ஒளி) முகம்மதிய, கிருத்துவ, இந்து சமயங்களைச் சார்ந்த எல்லா தாய் கர்ப்பபையிலுள்ள கருவை குழந்தையாக உருவாக்கி பிறக்கும் வரை காப்பவரும், மேலும் காப்பவரும், அவரே.

நபிகள், இயேசு, கிருஷ்ணன், வள்ளலார் போன்றவர்களுக்கு ஆற்றல் தந்தவரும் அவரே. நமக்கு உடல், உள்ளம், உயிர்கொடுத்து நம்முள் அன்பே, அறிவே, இரக்கமே வடிவமாயிருந்து இயக்குகிறார்.

அருள், அறிவு, அருள் அனுபவமே ஆண்டவர் திருவடிகளாகும். அவர் பூரண திருவருளை அன்பு, இரக்கத்தால்தான் பெற முடியும். திருவருளால், பிணி, மூப்பு, பயம், துன்பம், மரணத்தை தவிர்க்கலாம்.

1. திருச்சிற்றம் பலத்தின்கண் மனதை செலுத்துவதைத் தவிர மற்ற எந்தவித ஆபாசத்திலும் செலுத்தாது மனதை இழுத்து புருவமத்தியில் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் அருள், அறிவு, அருள் அனுபவ

திருவடிகள் நம் சிரசில் பதியும். இதுவே அகவழிபாடு சமய மதத்தினர் புறவழிபாட்டில் மனதை செலுத்துவதால் உன்பதத்து அன்பில்லை என்கிறார்.

அகவழிபாட்டால் உலக மாயையில் மனம் சிக்காது. சாகாக்கலை திருவருட்பா. ஆண்டவர் சொல்ல பெருமானால் இயற்றப்பட்டது.

இதுவே சொந்த படிப்பு, வாழ்விக்கும் படிப்பு உள்ளதை உள்ளபடி கூறும் மெய்நெறியாகிய சன்மார்க்கத்தை கடைப்பிடித்தால் மனம் கட்டுப்படும்.

முற்பிறவியில் செய்த தீவினை நம்மை தாக்காது விரைவில் விலகும். (தொல்லை வினை ஒல்லை விட்டிடும்.

விடுத்திடில் என்னை நீர், விட்டிடுவேன் என் உயிரை என் அகத்திருந்து கண்ணுங்கருத்துமாக காத்து வரும் தங்களைத்தவிர எனக்கு உற்ற துணை வேறு இல்லை.

உயிரோடு இருப்பவரை ஒருவர் தூக்க முடியும். இறந்தவரை தூக்க நான்கு பேர்கள் தேவைப்படும். (தாயாகி தந்தையுமாய் என்னை தாங்குகின்றத்

தெய்வம்) பரமான்மா ஆன்மநேயத்தோடு நம் ஆன்மாவில் உறவு கொண்டுள்ளார். ஆண்டவரைப் பெற்றோராகவும் எல்லா உயிர்களை சகோதரர்களாக உறவு கொள்வதே ஆன்ம நேயமாகும். மனிதனும் வினைக்கேற்ப பிராணிகளாக பிறக்கிறான்.

2. எந்த வல்லபமும் இல்லாத சிறியவன் (இளையவன்) அவனுக்கு அருள்பாலிக்க வேண்டும் என்று ஆதரவாகப் பரிந்து (இசைக்கின்ற) பேசுபவர் யாரும் இல்லை, எந்தவித ஆதாரமற்ற (ஏழை) எனக்கு ஏன் அருள்பாலித்தீர்கள் என தங்கள் முன்னின்று (எதிர்நின்று இயம்புதல்) கேட்பவர்களும் இல்லை.

3. சீரும் சிறப்புடைய வளம் பொருந்திய (மருவு) தங்கள் திருவருள் அள்ள அள்ள வளருவதைத் தவிர குறைவதில்லை.

மேலும் தங்களுக்கு மாறாகவும் எதிராகவும் எந்த விதவம்பு வழக்கும் இல்லை. தங்களை நாடி வந்து, சரணடைந்து கனிந்து கேட்பவர்களுக்கு (இரப்போர்க்கு) தடையின்றி தந்து தனிப்பெருங்கருணை வடிவினராக அருள்பாலிப்பவராக (வன்மனத்தவர் இல்லை) விளங்குகிறீர்.

4. எல்லாம் செய் வல்லபத்தையுடையதாய் எந்த விதத்திலும் சோர்வு அடையாத தாயுள்ளம் சென்னை. (தளர்விலா)

பாடல் - 30

எத்திக்கும் என்னுளந் தித்திக்கும் இன்பமே
என்உயிர்க்கு உயிராகும் ஓர்
ஏகமே ஆனந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வமே நன்

முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவி லாத
முருகனே நெடியமால் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமை மகனே

பத்திக்கு உவந்து அருள் பரிந்தருளும் நின்னடிப்
பற்றருளி என்னை இந்தப்
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவனாய்
பண்ணாமல் ஆண்டருள்வாய்

சத்திக்கும் நீர்ச்சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே

படியில் உழல்கின்ற குடி

1. உயிருள்யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே உயிர்நலம் பரவுக என்றுரைத்த மெய்ச்சிவமே ஒவ்வொரு உயிருக்குள் உயிராயிருந்து இயக்குவது உள்ஒளியே, ஆன்மநேயனே (என் உயிருக்கு உயிராகுமோர் ஏகமே)

எப்பாரும் எப்பதமும் எங்ஙனமும் நான் சென்றே எந்தை நினது அருட்புகழை இயம்பிடல் வேண்டும். (எத்திக்கும் என்னுளம் தித்திக்கும் இன்பமே) நின் அருட்புகழைப் பாடி ஆடும்போது என் மனம் ஒருமை நிலையுறுகிறது.

இடைவிடாது நின்னிடம் மனதை செலுத்தும் முயற்சியால் யோகநிலை கூடுகிறது. மேலும் அருளமுதம் சுரப்பதால் ஆனந்த இன்ப அனுபவமாகிறது (போகம்) எல்லாம் செய்வல்ல பத்தைத் தரும் திருவருட்செல்வமே கிடைக்கிறது.

2. அருளம்பலப்பற்றுக் கொள்வதால் உலகியல் பற்று நீங்கி விடுதலைப் (முத்திநிலை) பெற்றேன். தாங்களே இதற்கு முதல்வராக மூலக்காரணமாயிருக்கிறீர்கள். என் சிற்றம்பலத்தில் (புருவமத்தி) மெய்ஞ்ஞானம். விளங்கும் விளையாட்டை விளையாடி அருள் அறிவு அருள் அனுபவம் விளங்கும்படி செய்கிறீர்.

ஆதி அந்தமிலாது (முடிவிலாத) என்றும் இளமை யோடிருக்கும் முருகனாய் விளங்குகிறீர். சைவ சமயத்தார் வணங்கும் சிவனாருக்கு முத்தமிட்டு கொஞ்சும் அருமை மகனுமாய் விளங்குகிறீர்.

வைணவ சமயத்தார் போற்றும் திருமாலுக்கு (நெடியமால்) மருமகனாக விளங்குகிறீர்

3. இந்த உலகத்தில் (படியில்) மீண்டும் பிறந்து உலக மாயையில் சிக்கி (உழன்று) துன்பங்கள் தொல்லைகளை அனுபவித்து இறக்கும் (குடி) மக்களில் ஒருவனாக ஆக்காதீர்கள்.

தங்கள் அருள் அறிவு அருள் அனுபவ திருவடிகளை, (நின்னடி பற்றருளி) மெய்ஞ்ஞானிகளின் சென்னியில் (தலையில்) சூட்டி மகிழ சன்மார்க்க மெய்ப்பொருளை உணர்ந்து மெய்நெறியை கடைப்பிடித்து (பத்திக்கு உவந்து) சித்திநிலை நித்தியநிலை பெற்றுதுபோல அருள்பாலிப்பாயாக.

4. அமாவாசை, பௌர்ணமி போன்ற நாட்களில் கடற்கரையில் பயங்கரமாக அலைகள் வீசி ஆராவரம் செய்யும் சென்னை.

பாடல் - 31

நான்கொண்ட விரதம் நின் அடி அலால் பிறர்தம்மை
நாடாமை யாகும் இந்த நல்விரத
மாங்கனியை இன்மை எனும்
ஒருதுட்ட நாய் வந்து கவ்வி அந்தோ

தான்கொண்டு போவதினியென் செய்வேன்
என்செய்வேன் தளராமையென்னும் ஒருகைத்
துடிகொண் டடிக்கவோ வலியிலேன்சிறியனேன்
தன்முகம் பார்த் தருளுவாய்

வான்கொண்ட தெள்ளமுதவாரியே மிகுகருணை
மழையே மழைக் கொண்டலே
வள்ளலே என் இரு கண்மணியே என் இன்பமே
மயில்ஏறு மாணிக்கமே

தான்கொண்ட சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே !

தான் அலாது இறையும் உயிர்க்கு அசைவிலை

3. படைத்தல் காத்தல் போன்ற தொழில்களைச் செய்யும் பிரம்மா, விஷ்ணு மற்ற வானுலக தேவர்கட்கு எல்லாம் செய்வல்லபத்தைத் தரும் தெளிந்த அமுதத்தை கடல் அளவு அளிக்கின்றீர்.

மண்ணுலகிலுள்ள உயிர்களும் மக்களும் உயிர்வாழ்வதற்கு ஏற்ற உணவுப் பொருட்களை அளிக்கும் தாவரங்கள் செழித்து வளர நீரைத் தேக்கி வைத்திருக்கும் மேகம் தக்க காலத்தில் மழை பெய்து உதவும்படி செய்கிறீர்.

உள்ளபடி நினைந்து கனிந்து உருகுபவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாயிருக்கிறீர். உலக அனுபவ முதல் இறை அனுபவம் வரை சான்றோர்களிடம் சென்று மெய்ப்பொருளைக் கேட்கவும் மெய்ஞ்ஞான நூல்களைப் படிக்கவும் உதவுகிற என் இருகண்மணிகளுக்கு ஒளியினை வழங்குகிறீர்.

ஓங்கார அணைமீது (மயில்) வீற்றிருக்கும் தாங்கள் செந்நிறமாணிக்க அருட்பிரகாசத்துடன் விளங்கி மக்களுக்கு பேரின்பப் பெருவாழ்வுப் வழங்குகிறீர்.

1. தான் அலாது இறையும் உயிர்க்கு அசைவிலாத் தலைவனே திருச்சிற்றம்பலத்தே எச்சமயத் தெய்வங்களுக்கும் தான் என நின்ற தெய்வமே.

இதுவரை தோன்றிய பல ஆயிரக் கணக்கான சமயங்களின் தெய்வங்களை இயக்குபவர் தாங்களே. அவை கற்பனை தெய்வங்களே.

அருள் அறிவு, அருள் அனுபவம் தங்கள் திருவடிகளாகும். இத்திருவடிகளை சிரசிலே பதிய செய்து கொண்ட மெய்ஞ்ஞானிகளால் தான் உலகம் நிலைபெறுகிறது. உலகம் உயர்ந்தோர் மாட்டு.

சிற்றம்பலத்தின் கண் (புருவ மத்தி) மனதை செலுத்துவதைத் (அன்புக்காட்டுவது) தவிர மற்ற எந்தவித ஆபாசத்திலும் மனதை செலுத்தாது இழுத்து நிறுத்த வேண்டும்.

அந்த அன்போடு தொல்லைகளால்துன்பப்படும். உயிர்கள் மீது இரக்கம் கொண்டு உபகாரம் செய்தால் ஆண்டவர் திருவருள் கிட்டும். இதுவே நான் கொண்ட (விரதம்) குறிக்கோளாகும்.

என் அகத்தே உள்ள தங்கள் திருவடியைப் பற்றும் குறிக்கோளை (விரதம்) மறந்து மற்ற சமயத்தினர் புறத்தே காட்டும் கற்பனைத் தெய்வங்களை நான் விரும்பாதிருக்க (நாடாமை) வேண்டும்.

2. என் குறிக்கோள் மாங்கனி போல பழுத்துள்ளது. இதனை அறிவு (கவ்வி) வறட்சி எனும் கொடிய நாய் பறித்துக்கொண்டு ஓடுவதுபோல (கல்வி) உலக மாயையில் (மண், பெண், பொன், ஆசை)சிக்கித் தவிக்கிறேன்.

அறிவற்ற சிறியேனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தங்கள் திருவடியைப்பற்றிக்கொள்வதில் சோர்வடையாதிருக்கும் (தளராமை),

உறுதி என்ற தடிகொண்டு அடிக்கவும் இயலவில்லை (வலியிலேன்) இருந்தாலும் தங்கள் திருவடியை உறுதியாகப் பற்றிக்கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டதால் என்மீது இரக்கம் கொண்டு அருள்பாளிக்கிறீர்.


வடலூர் சத்திய ஞானசபை